மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

1-12-56

★

அணு 4

★

வரும்பொருள் உரைக்கும் தன்மை

ஒன்றின் நிகழ்காலச்சூழ்நிலைகளை ஆராய்ந்து அதன் எதிர்காலத்தின் போக்கு எப்படி அமையும் என்பதை வரையறுத்துக் கூறும் வல்லமை அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் நிரம்ப உண்டு.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் காங்கிரசில் மிகத் தீவிரவாதியாக இருந்து பாடு பட்டுக்கொண்டு வரும்போதே அவர் அண்ணாவோடு நெருங்கிய நட்புறவு கொண்டு பழகும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். கட்சிப்பிரச்சினைகள் வரும்போது தம்மை ஒரு தீவிர தேசிய வாதியாகக் காட்டிக்கொள்வதிலும், அந்த நேரங்களில் அண்ணா அவர்களை எந்த அளவுக்கும் எதிர்த்து நிற்கத் துணிவு கொள்வதிலும் தோழர் நடராசன் ஒருபோதும் தவறுவதில்லை.

தோழர் என். வி. நடராசன் அவர்களின் உள்ளம், உணர்ச்சி ஊக்கம் ஆகியவற்றைக் கண்ட அண்ணா அவர்கள், "நடராசன்! நீ என்றைக்கேனும் ஒருநாள் என் கட்சிக்கு வந்து சேரத்தான போகிறாய், பார்! என்னை விட்டு நீ தப்பமுடியாது!" என்று அடிக்கடி சொல்லு வார்கள். அதற்கு, "அண்ணா! அதுதான் முடியாது! எப்பேர்ப்பட்ட நிலைமை வந்தாலும் நான் தேசியத்தை விட்டு, உங்களைப்போல் ஏகாதிபத்ய தாசனாக மாறமாட்டேன்!" என்று பதிலி றுப்பார். "ஏன் இப்பொழுது வீராப்பு பேசுகிறாய்.? போகப்போகப் பார்!" என்று அண்ணா அவர்கள் சிரித்துக்கொண்டே கூறுவார்கள்.

தோழர் நடராசன் அவர்கள் அண்ணாவிடம் பேசும்போது, "காங்கிரசு தாய்மொழி தமிழுக்குத்தான் ஊக்கமளிக்குமே ஒழிய, இந்தியைக் கட்டாயமாக ஒருகாலும் புகுத்தாது. மக்க ளின் நலத்திற்கு மாறுபாடாகக் காங்கிரசு ஒருபோதும் நடக்காது" என்று அடிக்கடி கூறுவார். ஆனால் ஆச்சாரியார் அமைச்சர் அவை 1938இல் இந்தியைக் கட்டாயப்பாடமொழி யாகப் புகுத்தியது. அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் நடராசனைப் பார்த்து "இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்கள். "இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது காங்கிரசின் திட்டமல்ல. எனவே நான் அதனை எதிர்க்கத்தான் போகிறேன்'" என்று தோழர் நடராசன் அவர்கள் அதற்கு மறுமொழி பகன்றார்.

இந்தி எதிர்ப்பு இயக்கம் மிகமும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது காங்கி ரசுப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளும் தோழர் நடராசனுக்கு மிக்க சங்கடமான நிலைமை ஏற்பட்டது. காங்கிரசுக்காரர்கள் பலரும் கட்டாய இந்தியை ஆதரித்துப் பேசினர். ஆதரித்துப பேசினால் அண்ணாவின் கேலி பிறக்கும், எதிர்த்துப் பேசினால் பிற காங்கிரசுக் காரர்களின் சினம் சீறும். இறுதியில், தமக்குப்பட்ட கருத்துவழி நின்று, அண்ணாவின் கேலி மொழிக்கு இடங் கொடாமல், இந்தியை எதிர்த்துப் பேசவே தலைப்பட்டார். இது காங்கிரசு வட்டாரத்தில் பெரும்புயலைக் கிளப்பிவிட்டது. இந்திப் பிரச்சினையைப்பற்றி முடிவு எடுக்க மாவட்டக்காங்கிரசுச் செயற்குழுக் கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட்டது.

இந்திப்பிரச்சினையைப் பற்றி முடிவு எடுக்கக் காங்கிரசின் செயற்குழுக் கூட்டம் கூட்டப் பட்டிருக்கிறது, அதற்குத் தோழர் நடராசன் போயிருக்கிறார் என்ற செய்தியைக் கேள்வியுற்ற அறிஞர் அண்ணாஅவர்கள் தம் உற்ற நண்பரான டாக்டர் சி. கணேசன் அவர்களை அவசரமாக அழைத்து "இன்று காங்கிரசுச் செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது. தோழர் நடராசன் சென்றிருக்கிறார். அவர் இந்தியை எதிர்த்துப் பேசப்போகிறார். பெரும்பாலோர் இந்தியை ஆத ரித்துத் தீர்மானம் செய்யப்போகிறார்கள். தோழர் நடராசன் அந்தக்கணமே விலகல் கடிதம் கொடுத்து விட்டு வெளியேறப்போகிறார். அதற்குள் நீ இன்று மாலை நடைபெறும் நமது இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில், 'காங்கிரசைவிட்டு வெளியேறிய தோழர் என். வி. நடராசன்' அவர்களும் கலந்து கொள்வார் என்று துண்டு அறிக்கை அச்சடித்து, எடுத்துக்கொண்டு கூட்டம் நடைபெறும் கட்டிடத்தின் வாயிலண்டையில் போய் நில். தோழர் நடராசன் விலகல் கடிதம் கொடுத்துவிட்டு வெளிவந்தால், இந்த துண்டு அறிக்கைகளை அவரிடமும், பிறரிடமும் கொடு. நிலைமை வேறு விதமாக இருந்தால் அப்படியே எடுத்துக்கொண்டு வந்து விடு!"' என்று சொல்லி அனுப்பினார்கள்.

அண்ணா அவர்கள் முன்கூட்டி நினைத்தவாறே' நிகழ்ச்சி நடந்தேறி, தோழர் நடராசன் விலகல் கடிதத்தைத் தோழர் சத்தியமூர்த்தி அவர்களிடம் கொடுத்துவிட்டு, வெளியே வந்தார். தோழர் கணேசன், நடராசன் அவர்களிடம் துண்டு அறிக்கையை நீட்டினார். தோழர் நடராசன் துண்டு அறிக்கையைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனார். அறிஞர் அண்ணாவின் 'குறும்பு' என்று எண்ணிக்கொண்டு, வேறு வழியின்றி அன்று மாலைப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார். அறிஞர் அண்ணா அவர்களின் 'வரும் பொருள் உரைக்கும்' தன்மை வென்றது! அன்று தொடங்கிய தோழர் என. வி. நடராசன் அவர்களின் திராவிட இயக்கப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மன்றம்
இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

மலர் 5 ☆ (1—12—56) ☆ இதழ் 15

அரியலூர் விபத்து

அரியலூரில் நடந்த கோர இரயில் விபத்து தமிழகத்தைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

வெள்ளம், புயல் போன்று இயற்கையின் எல்லை மீறிய தொல்லைகளைத் தாங்க முடியாமல் நாடு தத்தளிக்கும்பொழுது, இடையிடையே-இது போன்ற விபத்துக்களும் உடன்சேர்ந்து உயிர்களை அழிக்கின்றன; நாட்டை அல்லற்படுத்துகின்றன.

வேதனை தரும் செய்தி, இதற்கு முன் ஏற்பட்டிராத பயங்கர இரயில் விபத்து! கேட்டதும் திடுக்கிடவைத்தது. தொடர்ந்து வந்த செய்திகள் வேதனையை அதிகரிப்பதாக இருந்தன.

விபத்து நேர்ந்ததும், உடனே சென்று விபத்தில் சிக்கியவர்களுக்கு பணியாற்றிய கழகத் தோழர்களும் மற்றவர்களும் தந்த விவரங்கள் நெஞ்சை உருக்குவதாக உள்ளன. இதுவரை வந்த செய்திகளிலிருந்து, 144 பிணங்கள் எடுக்கப்பட்டுள்ளன. சிக்கிப் புதையுண்டவர்கள், காட்டு வெள்ளத்தில் அடித்து ஒதுக்கப்பட்ட பிணங்கள், ஆற்றுவழியே கடலில் கலந்த உடல்கள் எவ்வளவோ! நினைக்கும்பொழுது நெஞ்சில் பெரும் வேதனை மூளுகிறது.

“பிழைத்தவர்கள் எண்ணிக்கையைச் சொல்ல வேண்டுமே தவிர, இறந்தவர்கள் எண்ணிக்கையை யாராலும் சொல்லமுடியாது” என்று விபத்து நிகழ்ந்த இடத்திற்குச் சென்று பணியாற்றிவரும் தோழர் அம்பில் தருமலிங்கம் எழுதியுள்ளார். இறந்தவர்களின் தொகையைக் கணக்கிடமுடியாதவாறு விபத்துப் பெரும் அளவில் நிகழ்ந்திருக்கிறது.

பெரிய இரயில்வே விபத்துகள் இத்துடன் மூன்று நிகழ்ந்துள்ளன. ஜான்கோன், மகபூப் நகர், அரியலூர் ஆகிய இந்த மூன்று இரயில் விபத்துகள் மக்களிடைப் பெரும் கலக்கத்தை மூட்டியுள்ளது. இரயில்வே நிர்வாகத்தின் திறமையைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய அவசியத்தில், இப்பெரும் விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. இரயில்வே நிர்வாகம் மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. இந்த விபத்துகளின் பொறுப்பும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்ததாகும். அதை உணர்ந்ததால்தான் மத்திய இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் தமது இராஜிநாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார். மந்திரியின் இராஜிநாமா, அவரது பொறுப்பின் அளவைக்காட்டுவதுடன், அவருக்குற்ற மனவேதனையைக் குறைக்கப் பயன்படலாம். ஆனால் விபத்தால் நாடு அடைந்துள்ள வேதனை சொல்லமுடியாதது- குறைக்கமுடியாதது. குறுகிய காலத்தில் மூன்று பெரும் இரயில்வே விபத்துகளுக்கான காரணம் ஆராயப் படவேண்டும், குறைகள் தீர்க்கப்படவேண்டும்.

கடந்த 28 ஆண்டுகளில் அரியலூர் இரயில்வே பாலத்திற்கு குறிப்பிடத்தக்க, பெரிய அளவில், திருத்தங்கள் (ரிப்பேர்கள்) நடைபெறவில்லையெனத் தெரிகிறது. அவ்வப்பொழுது நடைபெறும் சிறு வேலைகள், பூச்சுகள், இவைகளைத்தவிர அடிப்படையின் உறுதியை அறிந்து, கெட்டிப்படுத்திப் பாதுகாக்கும வேலைகள் நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஆக வெளித்தோற்றத்தில் காணப்படாது, உள்ளுக்குள் ஏற்பட்ட நலிவு விபத்துக்குக் காரணமாயிருந்திருக்கலாம். அத்தகைய காரணம் முககியமானதாக இருந்திருக்குமேயானால், ஏற்பட்ட விபத்தின் பெரும்பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சார்ந்ததாகும்; நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்ததற்கும், படுகாயமுற்றதற்கும மத்திய அரசாங்கத்தின் திறமையற்ற போக்கு காரணமாகும்.

ஆண்டுதோறும், இரயில்வே கட்டணத்தை உயர்த்துவதில் அரசாங்கம் அக்கறை காட்டியதேயன்றி, பிரயாணஞ்செய்பவர்களின் பாதுகாப்பில் உரிய அளவு அக்கறை காட்டத்தவறிவிட்டது. விபத்துக்கானகாரணத்தைக்கண்டு, இனிமேல் விபத்துகள் நேராவண்ணம் பாதுகாப்புத் தேடுவதுடன், இந்த விபத்திற்கு ஆளானவர்களின் குடும்பங்களுக்கும், படுகாயமடைந்து கால்கையிழந்தோருக்கும், தக்க நஷ்டஈடு-காலங்கடத்தாமல்-அரசாங்கம் தரவேண்டும்.

அரியலூர் கோர விபத்தில் பலரை இழந்து சோகத்தில் தத்தளிக்கும் நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு நமது துக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். படுகாயமடைந்து துன்பப்படுபவர்களுக்கு நமது பரிவும் பணியும் உரியதாகுக!

★ அரசியல் ஆபத்து ★

அரியலூர் விபத்துக்குப்பின் மற்றொரு விபத்து. அரசியல் ஆபத்துத் தமிழ் நாட்டுக்கு மத்திய அரசாங்கத்தினரால் "மனமுவந்து" அனுப்பப்பட்டுள்ளது. அதுதான் ஏ. ஜே. ஜான் அவர்களைக் கவர்னராக நியமனம்.

தமிழ் நாட்டிற்கு "தமிழ் நாடு" என்று பெயர் சூட்டப்படவில்லை.

தமிழ்மொழி பேசும் மக்களுக்கு "தமிழ் மொழி" ஆட்சி மொழியாகவில்லை.

மாநிலச் சிரமைப்பின் பிறகும், தமிழகத்துக்குச் சேர வேண்டிய பகுதிகள் தமிழகத்துடன் சேராமல் இருக்கின்றன. வடக்கெல்லைப் போராட்டம் இன்னும் முடிவடையவில்லை, தெற்கெல்லையில் தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டுமென்று தமிழர்களின் வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல், தமிழகத்தின் மீது மத்திய சர்க்காரின் உத்தரவு பாய்ந்துள்ளது.

இரயில் விபத்தில் இடிந்த பாலத்தை மீண்டும் கட்டிவிட முயலுவார்கள். ஆனால் இப்பொழுது நடைபெறும் அரசியல் சூதில், இடிந்து, பாலம்—இடிந்துள்ள தொடர்பு மேலும் இடிக்கப்படுகிறது. மலையாளி—தமிழர் தொடர்பு சச்சரவுக் குள்ளாக்கப்படுகிறது. தென்னகத்தில் அமைதி நிலவாத நிலை உண்டாக்கப்படுகிறது. ஒற்றுமைக்கு இடமில்லாதபடி, செய்ய டில்லி ஆதிபத்தியம் முயலுகிறது. உத்தர விடுகிறது. உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து செயலாற்ற சில "பச்சைத் தமிழர்கள்" இருக்கின்றனர் என்ற காரணத்தால், எதிர்ப்போ திகைப்போ, வேதனையோ வருத்தமோ தமிழ் நாட்டில் எது நேர்ந்தாலும், மேலிடம் தரும் கட்டளைகளை "கனம்" காமராஜர் காப்பாற்றுவார் என்ற எண்ணத்தால், டில்லி பேரரசு ஜான் அவர்களைக் கவர்னராக அனுப்புகிறது.

"கவர்னர் பதவி கூடாது, அதனால் லட்சக்கணக்கில் பணம் வீணாக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும்" என்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகிறோம். "கவர்னராகிய எங்களுக்கு வேலையெதுவும் இல்லை!" என்று கவர்னர்கள் கூடிய கூட்டத்தில் ஒரு கவர்னர் சொன்னார். கவர்னர் வேலை அவசியமற்றதென்பதை அவர்களே ஒப்புக்கொள்ளும் நிலையில், பத்து லட்சம் பதினைந்து லட்சம் என்று மக்கள் தரும் வரிப் பணத்தைப் பாழ் செய்வது அடாது. அந்த அடாத காரியத்தையும் ஆணவத்துடன் செய்யும் வகையில், தமிழர்கள் விரும்பாத—தமிழர்களுக்கு வேண்டாத ஒருவரை டில்லி ஆதிபத்தியம் கவர்னராகத் தேர்ந்தெடுத்து இங்கு அனுப்புகிறது.

ஜான் அவர்கள் திருவாங்கூர் கொச்சியில் முதன் மந்திரியாக இருந்தபொழுதும், மற்றும் இரண்டு மந்திரி சபையில் சேர்ந்திருந்தபொழுதும், நாஞ்சில் பகுதிகளை தமிழ் நாட்டுடன் சேர்வதை எதிர்த்துப் பேசியவர்; பட்டம் தாணுப் பிள்ளை தமிழர்களைச் சுட்டுத் தள்ளிய பொழுது அவருக்குப் பக்க பலமாக வாதிட்டவர்: தமிழர்களைப் பகைவர்களாக்கி அவர்களை ஒடுக்கிவிடத் தன்னால் முடிந்தவரை பாடுபட்டவர். அத்தகைய ஜான் அவர்களைத் தமிழ் நாட்டின் அரசாங்க அதிபராக ஆக்குவதென்பது, தமிழரைக் கேலி செய்வதாகும், தமிழரின் உணர்வை அவமதிப்பாகும்.

முதல் தேர்தல் நடந்த பிறகு, 108 பேர்கள கொண்ட திருவாங்கூர்—கொச்சி அசெம்பிளியில் காங்கிரசு 44 இடங்களைப் பெற்றது. அது கலைக்கப்பட்டு மறுமுறை தேர்தல் ஆனதும் காங்கிரசு 45 இடங்களைப் பிடித்தது. காங்கிரசு பெரும்பான்மைக் கட்சியாக இல்லாவிட்டாலும், எதிர்க்கட்சிகள் மந்திரி சபை அமைத்துவிடாதவாறு ஜனநாயகப் பண்பற்ற முறையில் காங்கிரசு மந்திரி சபை அமைத்தும், அசெம்பிளியைக் கலைத்தும், அந்த நாட்டு அரசியலை அலங்கோலமாக்கியது. ஜனநாயகம் கொலை செய்யப்பட்டபொழுதெல்லாம், ஜான் அவர்கள் அதற்கு உறுதுணையாக இருந்திருக்கிறார். கேரளத்தின் நம்பிக்கை இழந்தவரும், ஜனநாயக முறையை அழிப்பதற்கு உதவியவரும், தமிழரிடம் கடுமையான பகை பாராட்டியவருமான ஜான் அவர்கள் தமிழ் நாட்டுக்குக் கவர்னராக அனுப்பப்பட்டுள்ளார்.

தமிழ் மக்களுக்கும் தமிழ் நாட்டு அரசியலுக்கும் மிகவும் தீங்கு விளைவிக்கும் நியமனம் இது!

எல்லைப் பிரச்சினைகளை வளர்த்து, பக்கத்து இருமொழியினரிடை சச்சரவை நீடிக்கவைக்கும் விதத்தில் மத்திய அரசாங்கத்தின் போக்கு இருக்கிறது; தமிழகத்தின் தன்மானத்தைச் சோதிக்கும் விதத்தில் டில்லி ஆதிபத்தியம் ஆணவ உத்திரவுகளைப் போடுகிறது. அந்த ஆதிபத்தியத்துக்கு இங்குள்ள காமராஜர்கள் அடிபணிகின்றனர். ஆலவட்டம் வீசுகின்றனர், வளைந்த முதுகு நிமிராமல்

வாழ்த்துப் பாடுகின்றனர். நாடு பெரிதாக அவர்களுக்குப்படவில்லை, மொழி பெரிதாகப் படவில்லை: மக்களின் நேசம் பெரிதாகப்படவில்லை; பதவி ஒன்றுதான் பெரிதாகப்படுகிறது. மடத்தில் வேலை பார்க்க வேண்டும் என்றபெருமையில் பல்லக்குத்தூக்கியானாலும் கவலையில்லை யென்று செல்வதுபோல, பதவி வகிக்கும் அவசியத்தில் ஆணவம் பிடித்தவர்களுக்குப்பணிந்து போகும்நிலைகாமராஜர்களுக்கும் சுப்பிரமணியர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் இந்தியப் பிரதிநிதி

இலங்கையில் இந்தியாவின் உயர்தரப் பிரதிநிதியாக ஏ. தின்ஷா குன்தேவியா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரு நாடு மற்றொரு நாட்டிற்குத் தூதுவர்களை அனுப்புவதும், பிரதிநிதிகளை நியமிப்பதும், அந்த நாட்டில் தமக்குள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இரண்டு நாடுகளிடை நேசப்பான்மை தொடர்ந்து நிலவுவதற்குமாகும். இந்திய அரசாங்கத்தால் செய்யப்படும் வெளிநாட்டு நியமனங்கள் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவனவாக இல்லை. குறிப்பாக, மலேயா, இலங்கை, பர்மா போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படும் இந்தியப் பிரதிநிதிகள், அரசாங்கத்தின் அலங்காரப் பதுமைகளாகச் செல்கின்றனரேயன்றி, அங்கு சென்றுள்ள மக்களுக்குப் பாதுகாப்புத் தேடும் வகையில் செல்லவில்லை.

இலங்கையிலும் மலேயாவிலும் தமிழர்கள் பெரும்பாலாக உள்ளனர். எனவே அந்த நாடுகளுக்கு அனுப்பப்படும் இந்தியப் பிரதிநிதிகள் தமிழர்களாக இருந்தால்தான், அங்கு சென்றுள்ள தமிழர்களின் நிலையை உணர்ந்து பணியாற்ற முடியும். தமிழர்களின் மொழி, பண்பாடு அறியாத ஒருவரை அங்கு அனுப்பி, தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்கச் சொன்னால், அவர்களால் எங்கனம் முடியும்? இலங்கை, பர்மா, மலேயா, மற்றும் கிழக்கிந்திய நாடுகளுக்கும், தென்னாப்பிரிக்காவுக்கும் செல்லும் இந்தியப் பிரதிநிதிகள் தமிழர்களாயிருத்தல் வேண்டும். என்று தமிழ் நாட்டின் நேரிய வேண்டுகோள்கள் மத்திய அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தமிழர்களின் நலனைப் பாதுகாக்க, ஒரு தேசாயோ, ஒரு குன்தெவியாவோ டில்லி ஆதிபத்தியத்தால் அனுப்பப்படுகின்றனர். தமிழர்கள் குத்துண்டாலும், கொலையுண்டாலும், பழிக்கப்பட்டாலும், விரட்டப்பட்டாலும் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு அந்தக் "கொலுப் பொம்மைகள்" பேசாமலிருந்து விடுகின்றனர். தமிழரின் வாழ்வு அவலமாகின்றது. சென்றுள்ள இந்தியப் பிரதிநிதிகளை நாம் குறை கூறவில்லை. உண்மையில் அவர்களால் ஒன்றும் புரிந்துகொள்ள முடிவதில்லை, மொழி தெரியாத காரணத்தால்! தமிழர்களல்லாதாரை அனுப்புகிற இந்திய அரசாங்கம்தான் தமிழர் நலனைப் புறக்கணிக்கிறது.

இலங்கைப் பகுதியில் தமிழரின் உரிமை, தமிழ் மொழியின் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான குடும்பங்கள்பல தலைமுறைகளாக அங்குவாழ்ந்துள்ளனரேனும் தமிழர்கள் என்ற காரணத்தால், குடியுரிமை தரப்படாமல் அவதிக்குள்ளாக்கப்படுகின்றனர். இந்த நிலையில், தமிழறிந்த ஒருவர்—தமிழ் வரலாறு உணர்ந்த ஒருவர்—தமிழர்பால் இயல்பாக அக்கரைகொண்ட ஒருவர்—ஒரு தமிழர், இந்திய அரசாங்கத்தால் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். தமிழ்ப் பிரதிநிதிதான், தமிழர்களின் குறைகளைக் கேட்டு, உணர்ந்து, செயலாற்ற முன் வருவார். தமிழர்களின் கூக்குரல், தமிழனின் காதில் விழும், சோக நிலையை உணர்த்தும். தமிழறியாதவன் காதில் விழுந்தால், கூக்குரல் கூச்சலாகத்தான் தோன்றும், பொருள் விளங்காத காரணத்தால்!

தமிழ் நாட்டுக்கு, தமிழர்களுக்கு, இந்திய அரசாங்கம் மதிப்பளித்திருக்குமேயானால், கடல் கடந்து சென்றுள்ள தமிழர் நலனைப் பாதுகாப்பதில் ஆர்வங் காட்டியிருக்கும்; அங்கு தமிழர்களை அரசாங்கத் தூதுவர்களாக அனுப்பி தமிழர் நல்ல நிலையில் வாழ வழி செய்திருக்கும்! இந்திய அரசாங்கத்தின் பிடிப்பு வடநாட்டார் கையில் இருப்பதால், தமிழர் பெரும் பகுதியினராக வாழும் அயல் நாடுகளுக்கும், தமிழ் தெரியாத குஜராத்தியையும், மார்வாடியையும், அங்கு அனுப்பப்பட்டு விடுகின்றனர்!

டில்லி ஆதிபத்தியம்தான் அப்படி இருக்கின்றதென்றால், தமிழ் நாட்டுக்குக் கிடைத்த "கனம் மந்திரிகள்" இன்னும் மோசமான நிலை! இவர்களுக்குத் தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாமல் திண்டாடுகிறார்கள், தவிக்கிறார்கள்,

அடங்கி விடுகிறார்கள்! அதிகம் பேசினால் பதவிக்கு ஆபத்து என்று, பின் கவலைப்படாமல் இருந்து விடுகிறார்கள். "குளமாவது, மேடாவது" என்று ஏளனம் செய்திடும் காமராஜர்கள், கொத்தலவாலா, பண்டாரநாயகா செய்யும் கொடுமைகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அது மட்டுமல்ல, குளத்தையும் மேட்டையும் பறித்துக்கொண்ட ஒருவரையே கவர்னராகவும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்!

கடல்கடந்த தமிழர்களின் நலனைப் பாதுகாக்க, தமிழர்களைத்தான் அரசாங்கப் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். இப்பொழுதும் காலம் கடந்து விடவில்லை. இலங்கைக்கு நியமிக்கப்பட்டுள்ள இந்தியப் பிரதிநிதி அடுத்த ஆண்டு மார்ச்சு மாதத்தில்தான் அங்கு செல்ல வேண்டும். அதற்குள்ளாக அதற்குப் பதில் வேறொருவரை—தமிழரை நியமிக்கலாம். மத்திய அரசாங்கம் செய்யுமாவென்பதைப் பொறுத்துதான், தமிழர்களின் நலனில் இந்திய அரசாங்கத்துக்கு உள்ள அக்கறை வெளிப்படும்.

இரட்டை நாக்கு

"இந்தியாவின் உணவுப் பொருள் நிலைமை மிகத் திருப்திகரமான, உறுதியான நிலையில் இருக்கிறது. இந்தியா பூராவும், குறிப்பாகத் தென்னாட்டிலும், ஏராளமாக உற்பத்தி அதிகரித்திருக்கிறது." இந்த நம்பிக்கைத் தரும் வாக்கியங்களை மத்திய அரசாங்கத்தின் உதவி உணவு மந்திரி எம். வி. கிருஷ்ணப்பா அவர்கள் அளித்துள்ளார். ஐந்தாண்டுத் திட்டத்தில் அடிப்படையாக அமைந்துள்ள குறிக்கோள் உணவுப் பொருளைப் பொறுத்தவரை, இந்தியாவின் பற்றாக்குறை நீங்க வேண்டும் என்பதாகும். உற்பத்தி அதிகரித்திருக்கிறது. நிலைமை மிக நேர்த்தியாக இருக்கிறது அதிலும் தெற்கில் பார்த்தால் அமோகமான விளைச்சல் என்று உதவி மந்திரி பேசியுள்ளார். அவர் பேசியது பம்பாயில் 16—11—56 ல்!

"பக்கத்து மாநிலங்களில் உணவு நிலைமை மோசமாகிவிட்டதால், சென்னை மாநிலத்திலிருந்த உணவு தானியங்கள் அங்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. அதனால் இங்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விலை உயர்ந்துவிட்டது. விலையைக்குறைக்க நியாயவிலைக் கடைகளைத் திறக்கிறோம்" இவ்வாறு சென்னை மாநில விவசாய மந்திரி சென்னையில் பேசியுள்ளார். வேடிக்கை யென்னவென்றால் அவர் பேசியதும் அதே 16-ந் தேதி யன்றுதான்!

ஒரே நாளில் "இந்தியாவின் உணவு நிலைமை திருப்திகரமானது" என்று மத்திய மந்திரி பேசுகிறார், "பக்கத்து மாநிலங்களில் நிலைமை மோசமானதால், சென்னை மாநிலத்தில் பற்றாக்குறை உண்டாகி, விலை உயருகிறது" என்று மாநில மந்திரி பேசுகிறார்.

குதிரை காணமற் போனதற்குப்பின் கொட்டில் பூட்டப்படுவதுபோல, சென்னைப் பகுதியில் இருந்த நெல் மற்ற இடங்களுக்கு ஏற்றுமதியான பின், வேறு இடங்களில் அதிக விலை கொடுத்து நெல்லை வாங்கி வந்து இங்கு குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மோசமான நிலையைச் சமாளிப்பதைவிட நிலைமை மோசமாகாதவாறு முன்னதாகக் கவனத்தோடிருக்கலாம். மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் அசட்டையாக இருந்துவிட்ட காரணத்தால், இப்பொழுது மக்களின் நீண்ட வரிசைகள் ஏக்கத்துடன் அரிசிக் கடைகளில் காத்துக் கிடக்கின்றன.

விவசாயம் உறுதியான பொருளாதாரத்தில் அமைக்கப்பட்டு, தேவையான அளவு நிலையான—நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்வது அரசாங்கத்தின் கடமை. இந்தக் கடமையில் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் தவறி விட்டன.

அண்டசராசரம்

(56)

நரசிம்ம அவதாரம்

மச்சாவதாரத்தில் விட்டுணு இரண்யாட்சனைக் கொன்றதும், இரண்யாட்சனின் அண்ணனான இரண்யகசிபு பிரமாவை நோக்கி தவஞ்செய்யப் புறப்பட்டானாம். மந்தாரமலையில் அவன் தவஞ்செய்ய ஆரம்பித்தான். அவன் செய்த அகோரத்தவத்தினால் அவன் தலையிலிருந்து அக்னி கிளம்பி மேலுலகத்தைச் சுட ஆரம்பித்தது. சொர்க்க லோகத்திலிருந்த தேவர்களும், கடவுள்களும் அந்த உலகத்தை விட்டு பிரமலோகத்திற்கு ஓடினார்கள். இரண்யகசிபின் தபோவலிமை, தேவலோகத்தைக் காலிசெய்து பிரமலோகத்தில் நெருக்கடி உண்டாக்கியது, தேவர்கள் பிரமாவிடம் முறையிட்டார்கள். பிரமா கிளம்பி மந்தார மலைக்கு வந்தார். தவஞ்செய்யும் இரண்யகசிபுவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இரண்யகசிபு உட்கார்ந்திருந்த இடத்தில், செடி வளர்ந்து கரையான் புற்றுமூடி, எறும்புகள் அவன் உடலை அரித்துவிட்டன. பிரமதேவர் கரையான் புற்றைக் கலைத்து, இரண்யகசிபை எழச்செய்தார். அரித்துப்போன உடல் மறைந்து, இளமையும் மினுமினுப்பும் கொண்ட உடலுடன் இரண்யகசிபு எழுந்து நின்றான்.

"என்ன வரம் வேண்டும்?" எனப் பிரமா கேட்டார்.

"உமது சிருட்டியில் வந்த எந்த உயிராலும் எனக்குச் சாவு நேரக்கூடாது. விண்ணிலோ மண்ணிலோ, பகலிலோ இரவிலோ உட்பக்கத்திலோ, வெளியிலோ, மனிதனாலோ, மிருகத்தினாலோ எனக்குச் சாவு வரக்கூடாது. எனக்கு நிகராகவோ, எதிர்த்து நிற்பதற்கோ வலியுடைய எவரும் இருக்கக்கூடாது. உலகங்களை ஆளுவதற்குரிய வலிமை எனக்குக் கிடைக்கவேண்டும்." இரண்யகசிபு கேட்ட வரங்களைப் பிரமா தந்தார்.

வரங்களைப் பெற்று வலிவடைந்த இரண்யகசிபு முதலில் தேவலோகத்தில் புகுந்து, தேவேந்திரனை விரட்டினான், தேவர்களும் மிரண்டோடினார்கள், இந்திரனின் மகேந்தரபுரியில் இரண்யகசிபு அரசாளத் தொடங்கினான்.

இரண்யகசிபு தவஞ்செய்து கொண்டிருந்தபொழுது, அவனுடைய மனைவி தனித்திருந்தாள். இரண்யகசிபுவின் தவத்தைக்கண்டு அஞ்சிய இந்திரன், தனித்திருந்த இரண்யகசிபுவின் மனைவியைத் தூக்கிச்சென்றான். அப்பொழுது அவள் கர்ப்பவதியாக இருந்தாள். தனித்திருந்த அபலையை தேவர்க்கரசன் தீரத்துடன் பற்றியிழுத்துப் போகும்பொழுது நாரதர் வந்து, "கற்புக்கரசியான அவளை நீ எடுத்துச்செல்ல முயலுவது மகாத் தவறு. மிகுந்ததுன்பங்களை நீ அனுபவிக்கநேரிடும். ஆதலால், உடனே அவளை விட்டு நீங்குவாயாக!" என்று உபதேசித்தார். தேவேந்திரன் அச்சத்துடன் அவளைத் தனியே விட்டு ஓடினான். தன் கணவன் வருமளவும், அவள் தவஞ்செய்து கொண்டிருந்தாள். இரண்யகசிபு வரம்பெற்று மீண்டதும், தவஞ்செய்துகொண்டிருந்த மனைவியை மீட்டுக்கொண்டு, முதல்

வேலையாக இந்திரனை அவனுடைய உலகத்திலிருந்து விரட்டினான்.

இரண்யகசிபுவுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் மூத்தவனான பிரகலாதன் அரிநாமத்தைப் பூசித்தவனாக எப்பொழுதும் இருந்தான். கர்ப்பவதியாக அவன் தாய் இருந்தபொழுது, நாரதர் அவளுக்கு விட்டுணுவைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பாராம். கர்ப்பத்திலிருந்த பிரகலாதன் அவற்றைக் கேட்டு அரி பக்தனானான். பிரகலாதன் அரிநாமத்தைச் சொல்ல, யார் சொல்லியும் அடங்காமல் கடைசியில் இரண்யகசிபு கேட்க, அவரிடமும் அரிநாமத்தைச் சொல்லியபடி இருந்தான். இரண்யகசிபு அவனை மிரட்டிட, மகன் பணியவில்லை. கோபங்கொண்ட இரண்யகசிபு, மகனை அக்கினியில் தள்ளியும், யானையால் இடறச் செய்தும், பாம்புகளை விட்டும், நஞ்சுகொடுத்தும் பலவகையிலும் பிரகலாதனைக் கொல்ல முயன்றும் முடியவில்லையாம்.

இரண்யகசிபு தன் மகனை அழைத்து "நீ சொல்லுகிற அரி எங்குமிருப்பது உண்மையானால் இந்தக் கம்பத்திலும் அவன் இருக்கத்தான் செய்வான். உன்னை நான் இப்பொழுது உடல்வேறாக, தலைவேறாகத் துண்டிக்கப்போகிறேன். நீ நம்புகிற அரி உன்னை வந்து காப்பாற்றட்டும்." என்று வாளை உருவிவந்து, கம்பத்தைத் தன் கையால் தாக்கினான். உடனே கம்பம் வெடித்து, விட்டுணு நரசிம்ம உருவத்தில்-மனித உடல் சிங்கமுகத்துடன் தோன்றி, இரண்யகசிபுவைக் கொன்றுவிட்டாராம். இது பலருக்கும் தெரிந்த கதை.

விட்டுணு புராணங்கள் விட்டுணுவைப் புகழ இந்த அளவுடன் கதையை நிறுத்தினார்கள். இரண்யகசிபுவின் கொடுமை தாளாமல், இந்திரன், பிரமா, சிவன் ஆகியோர் விட்டுணுவிடம் அடைக்கலம் புக, விட்டுணு நரசிம்மாவதாரம் செய்து அவர்களை இரட்சித்தார் என்றிருக்கும்.

சிவபுராணத்தில், பிரமா இந்திரன் இவர்கள் மட்டும்—சிவனில்லை—விட்டுணுவிடம் அபயங் கேட்டார்கள். சிவனருள் பெற்ற விட்டுணு நரசிம்ம உருவத்தில் வந்து இரண்யகசிபுவைக் கொன்றார். பின் அந்தக் கர்வத்தில் நரசிம்மம் திரிந்துகொண்டிருந்ததாம். சிவன் அதைக் கண்டு, விட்டுணுவின் அகங்காரத்தை அழிக்க எண்ணி பாம்பு உருக்கொண்டு வந்து, நரசிம்ம மூர்த்தியில் தோலை உரித்துப் பங்கப்படுத்தி அனுப்பினார். இது சிவபுராணக்கதை.

விட்டுணு பக்தர்களுக்கு இந்தக்கதை பிடிக்கவில்லை. ஆதலால், நரசிம்மத்தை அடக்க சிவன் பாம்பு உருக்கொண்டு வந்தார். விட்டுணு அதற்கு அடங்காமல், ஒரு பறவையாக வந்து பாம்பைப் பிடித்து, அதன் கர்வத்தை அடக்கினார் என்று விட்டுணு பக்தர்கள் கதையை மேலும் வளர்த்து, சிவனைவிட விட்டுணு மேலானவர் என்பதை நிலைநாட்டிக்கொண்டனர்.

நரசிம்ம அவதாரக் கதை பாகவதபுராணத்தில் ஏழாவது காண்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. புராணகாரர்கள் முன்னுக்குப்பின் முரணாக எழுதுகிறார்கள் என்பதற்கு நரசிம்ம அவதாரக்கதையில் ஓரிடம் வருகிறது, இரண்யகசிபுவும், இரண்யாட்சனும் முதலில் துவார பாலகர்களாய் இருந்து சநத்குமார முனிவர்களால் சபிக்கப்பட்டு, மூன்று பிறவிகளில் விட்டுணுவை எதிர்த்துப் பின் வைகுண்டம் சேர அனுமதிக்கப்பட்டவர்கள். முதற்பிறவியில் இரணியகசிபு, இரண்யாட்சனாகப் பிறந்தார்கள். மச்சவதாரத்தில் இரண்யாட்சனும், நரசிம்ம அவதாரத்தில் இரண்யகசிபுவும் விட்டுணுவால் கொல்லப்பட்டார்கள். இரண்டாவது பிறவியில் அவர்கள் இராவண, கும்பகர்ணர்களாய்ப் பிறந்தார்கள். விட்டுணு இராமராக அவதரித்து, அவர்களைக் கொன்றார். மூன்றாவது பிறவியில் சிசுபாலன், தந்தவக்ரனாய் பிறந்து, கிருட்டிணனால் கொல்லப்பட்டார்கள். இந்தப் புராணக் கதைகளின்படி, இரண்யகசிபு, இரண்யாட்சன் கொல்லப்பட்டதற்குப் பின், இரண்டாவது பிறவி போய் மூனறாவது பிறவிதான் விட்டுணு கிருட்டிணனாக அவதரித்தார். ஆக, கிருட்டிணனைப் பற்றி, இரண்யகசிபு காலத்தில் யாருக்கும் தெரியாது. தெரிய முடிந்திருக்காது. ஆனால் பிரகலாதன் இரண்யகசிபுவிடம் பேசும்பொழுது, கிருட்டிணனைப் பற்றிச் சொல்கிறான்.

"அரிநாமம் உனக்கு எப்படித்தெரிந்தது" என்று இரண்யன் கேட்க, பிரகலாதன் சொல்கிறான்:

"கிருஷ்ணனைப்பற்றிய நினைவு மற்றொருவர் சொல்லி வருவதில்லை, தனக்குள்ளாகவே தோன்றிவிடும்."

நரசிம்ம அவதாரத்தின்போது இது சொல்லப்படுகிறது. இந்த அவதாரத்துக்குப்பின் நான்கு அவதாரங்கள்-வாமன பரசுராம,வியாச இராம அவதாரங்கள் கழித்து கிருஷ்ண அவதாரம் வரப்போகிறது. பிரகலாதன் பேசியபொழுது கிருஷ்ண அவதாரத்தைப்பற்றி எதுவும் தெரிந்திருக்க முடியாது. கிருஷ்ணன்

என்ற பெயரும் அவதாரத்தின் போதுதான் உண்டாக்கப்பட்டது. "விட்டுணுவின் நினைவு" என்று செல்வதற்குப் பதில் "கிருஷ்ணனின் நினைவு" என்று பிரகலாதன் சொல்லி விடுகிறான். புராணம் எழுதியவருக்குத் தெரிந்தது பிரகலாதனுக்கும் தெரிந்ததாக எழுதப்பட்டது.

ஒருவேளைப் பிரகலாதன் முக்காலமும் உணர்ந்தவன் என்று சொல்லப்படலாம். ஆனால் பின் அவன்பட்ட அவதிகளைப் பார்க்கும்பொழுது, முக்காலத்தை உணர்ந்து நடந்தவனாகத் தெரியவில்லை. நரசிம்ம மூர்த்தி இரண்யனைக் கொன்றதும், அந்தக் காட்சியை மகனான பிரகலாதன் கண்டுகளித்து, தந்தையைக்கொன்ற நரசிம்மமூர்த்தியைப் போற்றிப் புகழ்ந்தான். பிரகலாதனின் பக்திரசத்தை உணர்ந்த விட்டுணு, நேரில் தரிசனந்தந்து, "இனி அசுரரைக் கொல்லமாட்டோம்; உனக்கு அரிபதம் என்றும் மறவாது" என்று வரம்தந்து மறைந்தார். பிரகலாதன் பட்டத்தை அடைந்து ஆண்டுவந்தான். அரிபதம் மறவாத அரிபக்தனான போதிலும், பிரகலாதன் தீய குணங்களுடையவனாக மாறிவிட்டானாம். பக்தர்களுக்கு உரியபணிவு இல்லாமல், அகங்காரத்துடன் நடந்து கொண்டானாம். ஒரு முனிவர் ஒருநாள் பிரகலாதனின் அரசவைக்கு வந்தார். பிரகலாதன் அவரை எதிர்கொண்டழைக்காமல் இறுமாப்போடு இருந்தான். முனிவர் கோபித்து-முற்றுந் துறந்த முனிவர்களுக்குத்தான் கோபம் என்பது உடனே வந்துவிடுமே—"ஓ! பிரகலாதனே! எம்மை எதிர்கொண்டழைக்காமல் ஆணவத்துடன் அமர்ந்திருக்கின்றாயே இந்தப் பதவியும் சம்பத்தும் திருமாலால் உனக்கு வந்தது. இனித் திருமால் உனக்கு விரோதியாகிவிடுவார்! என்று சாபமிட்டுச் சென்றார். அதிலிருந்து பிரகலாதன் விட்டுணுவின் எதிரியாகி விட்டான். அரிபக்தி மறைந்தது, அரிநாமத்தைப் பக்தன் மறந்தான்; அரியைப் புகழ்ந்து பாடிவந்ததுபோக, அரியை எதிர்த்துப் பேசத் தொடங்கினான். பிரகலாதனுக்கு விட்டுணுவிடம் ஏற்பட்ட எதிர்ப்பு அவனை வைகுண்டத்துக்குப் போகச்செய்தது. விட்டுணுவை எதிர்த்துப் போராடச் சொன்னது. ஆம்! தந்தை கொல்லவந்தபோதும், அரியின் நாமத்தைக் கைவிட மறுத்த பிரகலாதன், இப்பொழுது வைகுண்டத்தை விட்டு அரியை விரட்டிட வேண்டுமென்று மிகுந்த ஊக்கத்துடனிருந்தான். நீண்டகாலம் போராடியும் விட்டுணுவைத் தோற்கடிக்க, பிரகலாதனால் முடியவில்லை. பின் அறிவு திருந்தி, பிரகலாதன் விட்டுணுவைத் துதித்து தன்னிடம் திரும்பிவந்தானாம். பிரகலாதனுக்கு முக்காலம் உணரும் ஆற்றல் இருந்தால், விட்டுணுவைப் பகைத்துக்கொண்டு போருக்குப் போயிருக்கமாட்டான்.

வாமன அவதாரம்

பிரகலாதனுக்கு விரோசனன் என்ற மகன் இருந்தான். விரோசனனுக்கு ஒருமகன் மாவலி என்பவன் பிறந்தான். இவனைப் பலி என்றும் சொல்லப்படுபவன். பலி அரசனானதும் வழக்கம்போல் தேவலோகத்தின்மீது படைஎடுத்து இந்திரனை விரட்டி விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் தன் குடைக்கீழ் கொண்டுவந்தான். தான் கொண்ட வெற்றிகளைக் காட்ட, பலிச் சக்ரவர்த்தி அசுவமேதயாகம் நடத்தினான். பூமியில் அதிலும் பரதகண்டத்தில் நடத்தினான். புராணங்களில் சொல்லப்படும் இடங்கள் பெரும்பாலும் வட இந்தியாவுக்குள் இருக்கக் காணலாம். ஏனென்றால் புராணங்களை எழுதியவர்களுக்கு அந்த இடங்கள்தாம் தெரியும். அசுவமேதயாகத்தை நர்மதை நதிக்கரையில் பிருகுவத்சம் என்ற இடத்தில் பலி நடத்தினானென்று பாகவத புராணம் கூறுகிறது. இந்த அசுவமேத யாகம் நடத்தியதைத் தவிர, பலி வேறெதுவுங் "கொடுமை" செய்ததாகத் தெரியவில்லை. பலி செய்யப்போகும் பெரிய யாகத்தைக் கேள்விப்பட்டு, விட்டுணு வாமன மூர்த்தியாக அவதாரம் செய்தார்.

காசிபர் என்ற முனிவருடைய முதல் மனைவி அதிதிக்குத் தேவர்கள் பிள்ளைகள்; இரண்டாவது மனைவி திதிக்கு அசுரர்கள் பிள்ளைகள். பலியின் தலைமையில் அசுரர்கள் தேவர்களைத் துரத்தியடித்ததும், தேவர்களின் தாயான அதிதி, அசுரர்களைத் தோற்கடிக்கக் கூடிய பிள்ளை வேண்டி, காசிபரைக் கேட்டாள். அத்தகைய பிள்ளை விட்டுணுவைக் கேட்டால் கிடைக்கக்கூடுமெனக் காசிபர் கூறி, பயோவிரதம் என்ற விரதத்தை இருக்கச் சொன்னார். இந்த விரதம் பங்குனி மாதம் சுக்கில பட்சப் பிரதமை முதல் பன்னிரண்டு நாட்கள் அநுட்டிக்கவேண்டிய விரதமாம். இந்த விரதத்தைப் பிரமா காசிபருக்கு உபதேசிக்க, காசிபர் தன் மனைவிக்கு உபதேசித்தார். அந்தப்படி அதிதி பயோவிரதமிருந்தாள். பதின்மூன்றாவது நாள் விட்டுணு சங்கு சக்ரதாரியாகத் தோன்றினார். அதிதி மெய்சிலிர்த்து, தன் சகக்கிழத்தியின் மக்கள் பட்டமாளுவதையும், தன் மக்கள் துரத்தப்பட்டு

விட்டதையும் கூறினாள். விட்டுணு அவளைத் தேற்றி, "ஓ மாதே! அசுரர்கள் தோற்கடிக்க முடியாதபடி சகல வலிமையுடனிருக்கிறார்கள். அதிலும் காலபலம் அவர்களுக்கிருக்கிறது. பிராமணோத்தமர்கள் அசுரர்களுக்கு உதவியாக இருக்கிறார்கள். ஆதலால் எதிர்த்து நின்று அவர்களைத் தோற்கடிக்க முடியாது. உபாயத்தினால் அடக்கவேண்டும். உபாயத்தைச் செய்ய நான் உனது பிள்ளையாய் அவதாரம் செய்யப்போகிறேன்." என்று அருளினார். பின் அதிதியிடம், வாமனனாக பகவான் அவதரித்தார்.

வாமனர் பலி செய்யும் அசுவமேதயாகத்துக்குச் சென்றார். பிராமணச் சிறுவனான வாமனரை, வரவேற்கவேண்டிய சாஸ்திர முறையில் சிறிதும் பிசகாமல் பலிச்சக்ரவர்த்தி வரவேற்றான். எது வேண்டுமானாலும் கேட்கும் படி வேண்டிக் கொண்டான். வாமனர் மிகவும் மகிழ்ந்து பிரகலாதனின் மகனும், உன் தந்தையுமான விரோசனன் பிராமணர்களிடம் அன்பு பாராட்டினான். பிராமணக்கோலத்தில் வந்த தேவர்களுக்கு தானங்கள் தந்தான். அவனைப் போல நீயும் நடக்கிறாய், நல்லதே! எனக்கு அதிகமாக ஒன்றும் வேண்டியதில்லை. எனது காலடியால் "மூன்றடி அளவு மண் கொடுத்தால் போதும்" என்று கேட்டார்.

பலி, கேட்டுச் சிரித்தான். "பிராமணர் குலத்தவரே! இந்த உலகம் முழுவதையும் கேட்டிருந்தாலும் தந்திருப்பேன். நீங்கள் கேட்டது மூன்றடி மண்தான்! இதோ, தருகிறேன்!" என்று தத்தஞ்செய்துகொடுக்கக் கமண்டலத்தை எடுத்தான். கமண்டல நீரை எடுத்துத் தெளித்துத் தரும்பொழுதுதான் தானங் கொடுத்ததாக முடியும். விட்டுணு வாமனராக வந்திருப்பதைக் கண்டுகொண்ட அசுரகுருவான சுக்கிராச்சாரி, பலியைத் தடுத்து, மூன்றடிமண் தரவேண்டாமென்று கூறினார். கொடுத்த வாக்கைஎப்படியும் நிறைவேற்றவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடன் பலி தானத்தைக் கொடுக்க நிச்சயித்து, கமண்டலத்தை எடுத்துத் தாழ்த்தினார். கமண்டலத்திலிருந்து நீர் வராமல் தடுக்க, சுக்கிராச்சாரி வண்டு உருவமாய் உள் நுழைந்து, அடைத்துக் கொண்டார்.

தண்ணீர் விழாததைக் கண்ட வாமனர், சுக்கிராச்சாரி தடுப்பதை அறிந்து, ஒரு தர்ப்பையை எடுத்து உள்ளே குத்தினார். அது சுக்கிராச்சாரியின் ஒரு கண்ணைக் குடைந்து விட்டது. வலி தாளாமல், சுக்கிராச்சாரி வெளியே வந்தார். தண்ணீர் விழுந்தது, தானம் கொடுக்கப்பட்டது.

தானத்தை வாங்கியதும், வாமன அவதாரம் திருவிக்ரம-வானைமுட்டு மளவு உயர்ந்த உருவமாக வளர்ந்ததாம். இரண்டடியில் மண்ணையும் விண்ணையும் அளந்து, மூன்றாவது அடிக்கு இடமில்லாமற்போக, பலியின் தலை மீது அடிவைத்துப் பாதாளத்தில் அழுந்தச் செய்தாராம். பாதாளத்தில் பலியை இருக்கச் செய்து, அவனுடைய வாசற்காப்போனாக விட்டுணு நின்று கொண்டிருக்கிறாராம். பலி மிகவும் உண்மையுடன் நடந்து கொண்டதால், அவனைப் பாராட்டி, ஒரு யுகத்தில் இந்திரனாக இருக்க விட்டுணு வரந்தந்தார். பலி பாதாளத்தில் அழுத்தப்பட்டதும், மறைந்திருந்த தேவர்கள் தைரியத்துடன் வெளிவந்தார்கள். இந்திரன் இழந்த அரசைப் பெற்றான்.

புராணங்களில் திருவிக்ரம அவதாரம் கூறப்பட்டபோதிலும், அவதாரங்களின் வரிசையில் அது சேர்க்கப்படவில்லை. பத்து அவதாரத்திலும், இருபத்திரண்டு அவதாரங்களிலும்—இரண்டு பட்டியலிலும் திருவிக்ரம அவதாரம் வருவதில்லை.

திருவிக்ரம அவதாரத்தில் விட்டுணு இரண்டு உலகங்களை அளந்ததும் அவருக்குக் கால்கள் வலியெடுத்தனவாம். பின் பாற்கடலில் பாம்புப்படுக்கையில் படுத்ததும், அவருடைய கால்களின் சிரமந்தீர, இலக்குமிதேவி கால்பிடித்து விட்டார்கள். திருமாலின் நிறம் கருமை. இலக்குமிதேவி பிடித்துவிட, அவருடைய கால்கள் சிவந்து போய்விட்டனவாம். அந்த அளவு மென்மையான உடலாம். இலக்குமியின் மலர்க்கரங்கள் பட்டதும், கரிய கால்கள் சிவந்துவிட்டன! இது பாகவதபுராணத்தில் இல்லை. கம்பருடைய கற்பனையில் இருக்கிறது.

"கரியவ னுலகெலாங் கடந்த தாளிணை
திருமகள் கரந்தொடச் சிவந்து காட்டவே"

(பாலகாண்டம். வேள்விப்படலம்
38ம் பாடல்)

உலகத்தை அளந்த சிரமந்தீர கால்பிடிக்கச் சொல்ல, கால்கள் சிவந்து இரத்தங் கட்டுமளவு பிடித்துவிடப் பட்டுவிட்டது!

★

வடக்கும் தெற்கும் - வாழ்க்கைநிலை

★

வடக்கு வளர்கிறது, தெற்குத் தேய்கிறது. டில்லி ஆதிபத்தியத்தின்கீழ் வடநாட்டுத் தொழில்வளம் பெருக்கப்படுகிறது, தென்னாட்டுத் தொழில்வளம் புறக்கணிக்கப்படுகிறது.

டில்லி ஆதிபத்தியம் தீட்டுகிற திட்டங்கள் வடநாட்டை வளப்படுத்த உதவுகின்றன. ஐந்தாண்டுத்திட்டங்கள் இரண்டும், வடநாட்டைத் தொழில் மயமாக்கப் பாடுபடுகின்றன. நூறு கோடி, இருநூறுகோடி என்று முதலீட்டைப்பற்றி இலட்சியப்படாமல், அங்கு திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன; தொழிற்சாலைகள் கட்டுப்படுகின்றன; சுரங்கங்கள் தோண்டப்படுகின்றன. அதேசமயம் தென்னாட்டிலிருந்து போகும் முக்கியமான-நியாயமான-வடநாட்டுத் திட்டங்களுடன் ஒப்பிடும்பொழுது சிறிய-திட்டங்கள்கூட டில்லியின் ஆதரவைப் பெறுவதில்லை. டில்லி தேவதையின் முழு அக்கரையும், முழுஅருளும் வடநாட்டிற்குக் கிடைத்தபடி இருக்கின்றன. மலையைக் குடைந்து ஆற்றைத்திருப்பும் திட்டம் வடநாட்டில்; மலைக்கு மலை அணைபோட்டு பெரும் நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கும் மிகப்பெரும் திட்டங்கள் அங்கு! வடநாட்டில் பாலைவனம் சோலைவனமாகிறது.

வடக்கு வளர்கிறது தெற்குத் தேய்கிறது. அதுமட்டுமல்ல, வளர்ந்துள்ள வடக்கு மேலும் வளர்கிறது, தேய்ந்துள்ள தெற்கு மேலும் தேய்ந்துகொண்டு போகிறது.

தென்னாட்டையும் வடநாட்டையும் பொதுவாக ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தென்னாட்டைவிட வடநாடு எல்லாவகையிலும், தொழில் துறையில் முன்னேறியிருக்கிறது. திட்டங்கள் போடுவதென்றால்; முதலில் தொழில் வளத்தில் பின் தங்கியிருக்கும் தென்னாட்டில் தொழில்கள் வளர உதவியிருக்க வேண்டும். நேர்மையாக நடந்திருக்குமானால், வடநாட்டைவிடத் தென்னாட்டில் அதிகத் திட்டங்கள் போட்டு, பரதகண்டத்தின் எல்லா இடங்களும் ஒரே சீரமைப்புடன், ஒரே நிறையுடன் வாழ டில்லி அரசாங்கம் செய்திருக்கவேண்டும். தொழிற்துறையில் உயர்ந்துள்ள வடநாடு மேலும் உயர்த்தப்பட்டு, தாழ்ந்த தென்னாடு மேலும் தாழ்த்தப்படுகிறது. "ஒரே நிறையல்ல" வடநாடு கனமாகிறது, தென்னாடு இலேசாகிறது.

ஒரு இடத்தில் ஐம்பது கோடி, அல்லது நூறுகோடி ரூபாயில் ஒரு திட்டம் உருவாகிறது என்றால், அதனால் அந்தப் பகுதிகளுக்கு எவ்வளவு பலன்கள் கிடைக்கிறது என்று பாருங்கள். முதலில் அந்தத் திட்டம் உருவாகும்பொழுது இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்கிறது. திட்டம் உருவாகும் இடத்தைச் சூழ்ந்து வேறு துணை வேலைகள் கிடைக்கின்றன. ஒரு அணைத்திட்டம் உருவாகிறதென்றால், அணைபோடும் இடத்தில் ஐம்பதினாயிரம் பேர்கள் வேலை செய்கிறார்களென்றால், அந்த இடத்தில் இல்லாமல் தூரத்தில், மலையில் சிறு கற்களை கல்லை உடைத்து அனுப்பும் வேலைகளிலிருந்து, சிமெண்டு தயாரித்தல், இரும்புக்கம்பிகளை உருக்குதல் போன்று பல பெரியனவும் சிறியனவுமான வேலைகள் நடைபெறும். அணைத்திட்டத்துக்கு வேண்டிய சாமான்களும், கருவிகளும் கூடியவரை அது உருவாகும் இடத்திற்கு அருகில் தயாரிக்கப்படும். ஒரு பெரிய வேலையை அடுத்து நூற்றுக்கணக்கில் சிறு தொழில்கள் உருவாகும். பெரிய திட்டம் உருவாகி முடிந்ததும், அதிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரம், முதலியவற்றை வைத்துப் பல தொழில்கள் புதிதாக உண்டாகும். ஒவ்வொரு புதியதிட்டமும், பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்கிறது, வாழ வழிசெய்கிறது, வருவாய் மிகும்படி உதவுகிறது. அதனால் அந்தப் பகுதியில் வளம் பெருகிறது, வாழ்க்கைத்தரம் உயர்கிறது.

டில்லி ஆதிபத்தியம் போடும் திட்டங்கள் பெரியவை அனைத்தும் வடநாட்டில் உண்டாக்கப்படுவதால், தொழில் வளம் அங்கு அதிகமாகிறது, வேலைகள் அதிகமாகின்றன. அங்கு தொழில்புரிந்து வாழ்வதற்கான வசதிகள் விரிவடைகினறன. தெற்கில் அந்த வசதிகள் குறைகின்றன.

வடநாட்டையும் தென்னாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, ஐந்தாண்டுத் திட்டங்கள் வருவதற்கு முன்பே வடநாட்டில்

தொழில் வாய்ப்புகள் அதிகம், தென்னாட்டில் குறைவு! ஏதாவது ஒரு தொழில் புரிந்து-அல்லது தொழிலில் ஈடுபட்டுச் சம்பாதித்து வாழ்க்கை நடத்துபவர்களைக் கணக்கிட்டால், வடநாடு-தென்னாடு தொழில் வளத்தில் எப்படியிருக்கிறது என்று கூறிவிடலாம். வாழ்க்கைத்தனம் இருபகுதிகளிலும் எவ்வாறு உயர்ந்தும், தாழ்ந்தும் இருக்கின்றதை கூறிவிடலாம்.

1951ல் மக்கள்தொகையை (சென்சஸ்) கணக்கிட்டவர்கள், ஒவ்வொருவரின் தொழிலைப் பற்றி, வருவாயைப்பற்றிக் கேள்விகள் கேட்டுப் பதில்களை எழுதிக்கொண்டார்கள். " என்ன தொழில் செய்து வாழ்கிறாய்? " " எவ்வளவு " வருமானம்? " " நீ பிறரை எதிர்பார்த்து வாடுகிறாயா, உன்னுடைய சுய உழைப்பில் வாழுகிறாயா? " என்றெல்லாம் பலகேள்விகள் போட்டு மக்கள்தொகைக் கணக்கு எடுக்கப்பட்டது. இந்தியா பூராவும் இந்தக் குறிப்புகள் எடுக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

வாழும் வகையை அடிப்படையாக வைத்து, மக்கள் தொகை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கபபட்டது.

1. ஏதாவது சம்பாதிப்பவர்கள்.

2. சம்பாத்தியம் ஏதும் அற்றவர்கள்.

வேலை செய்தோ, தொழிலில் ஈடுபட்டோ, வேறுவகையில் வருவாய் பெற்றோ, குடும்ப வருமானத்தைக் கொண்டு வருபவர்கள் முதல் பகுதியில் சேர்க்கப்பட்டார்கள். அவர்களில் சிலர், தன் வருமானத்திற்குள்ளாக வாழக்கூடிய நிலையில் இருக்கலாம்; சிலர் குறைந்த வருமானத்தைத் தன் குடும்பத்திடம் கொடுத்துத் தன் அண்ணனோ, தந்தையோ மற்ற வருமானத்தைக் கொண்டுவர அவர்களுடைய ஆதரவுடன் வாழ்பவர்களாக இருக்கலாம். வருமானம் குறைவாகவோ, அதிகமாகவோ எப்படியிருந்தாலும் வருமானம் கொண்டுவரும் எல்லோரும் முதல் பகுதி-" சம்பாதிப்பவர்கள் " பிரிவில் அடங்குவார்கள்.

சம்பாதிப்பது ஏதுவுமின்றி, மற்றவர்களை எதிர்பார்த்து வாழ்பவர்கள் இரண்டாவது பிரிவில் அடங்குவார்கள். அதாவது, " சம்பாதிப்பவர்கள் " கொண்டுவரும் வருவாயை வைத்து அவர்கள் ஆதரவில் வாழ்பவர்கள் இரண்டாவது பிரிவினர்.

"சம்பாதிப்பவர்கள்" " சம்பாத்தியம் ஏதும் அற்றவர்கள் " என்ற கணக்கை ஒவ்வொரு பகுதிக்காக எடுத்து, அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தொகையில் 100க்கு எவ்வளவு பேர் " சம்பாத்தியம் உள்ளவர்கள் " எவ்வளவுபேர் " சம்பாத்தியம் ஏதும் அற்றவர்கள்" என்று கணக்கு போடப்பட்டது. இவ்வாறு விகிதாசாரக் கணக்கு போடப்பட்டால்தான், ஒரு பகுதியின் தரத்தை மற்றொரு பகுதியுடன் ஒப்பிடமுடியும். அவ்வாறு போடப்பட்ட விவரம் கீழ் தரப்படுகிறது.

இந்தியாவின் பகுதி	சம்பாத்தியம் உள்ளவர்கள் 100க்கு	சம்பாத்தியம் ஏதும் அற்றவர்கள் 100க்கு
1. வடமேற்கு	45	55
2. வடக்கு	42	58
3. கிழக்கு	37	63
4. மேற்கு	43	57
5. மத்திய	49	51
6. தெற்கு	31	69

நம்மைப்போல வட இந்தியா, தென்னிந்தியா என்று இரண்டு பகுதிகளாக மட்டும் அரசாங்கக் கணக்காளர்கள் பிரிக்கவில்லை. இந்தியாவை ஆறு பகுதிகளாக்கி, அவர்கள் கணக்கெடுத்தார்கள். இதில்,

1. வடமேற்குப் பகுதி — டில்லி, ராஜஸ்தான், பஞ்சாப், பெப்சு, ஜம்மு காஷ்மீர், ஆஜ்மீர், இமாசல பிரதேசம்.

2. வடக்குப் பகுதி — உத்திரப் பிரதேசம்.

3. கிழக்குப் பகுதி — பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம், அஸ்ஸாம்.

4. மேற்குப் பகுதி — பம்பாய், சௌராஷ்டிரா, கட்சு.

5. மத்தியப் பகுதி — மத்திய பிரதேசம், மத்திய பாரத், போபால், ஐதராபாத், விந்தியப் பிரதேசம்.

6. தெற்குப் பகுதி — சென்னை மாநிலம், மைசூர், திருவாங்கூர், கொச்சி, குடகு.

இந்த மாநிலங்களின் பெயர்கள், மாநிலப் புது அமைப்புத்திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் இருந்தவையாகும். தெற்கு இந்தியா என்று குறிப்பிட்டதில், ஆந்திரம் கர்நாடகம் மலபார் இவைகள் பிரிவதற்கு முன்னர் இருந்த பழைய சென்னை மாநிலம், மைசூர், திரு—கொச்சி, குடகு தனி அமைப்புகள் சேர்ந்தவையாகும். இத்துடன் ஐதராபாத்தையும் சேர்த்துவிட்டால், தென்னிந்தியா என்பதன் அளவு ஓரளவு இருக்கும். இருந்தாலும், மக்கள் தொகைக் கணக்கில் கொடுக்கப்பட்ட விவரத்தை அப்படியே வைத்துப் பார்க்கலாம்.

டில்லி மாநிலத்தில், பெரிய நகரமாகவும் சிறிய கிராமமாகவும் இல்லாத நடுத்தர ஊரை எடுத்துப்பார்த்தால், அதில் 100க்கு 45 பேருக்கு சம்பாத்தியம் இருக்கும், அதாவது வேலைகள் கிடைக்கிறது, சம்பாதிக்கிறார்கள். மற்ற 55 பேர்களை அவர்கள் காப்பாற்றுகிறார்கள்.

பம்பாய் மாநிலத்தில், 100க்கு 43 பேர்கள் சம்பாதிக்கிறார்கள், அதாவது அவர்களுக்கு வேலை கிடைக்கிறது, வருமானம் கிடைக்கிறது, மற்ற 57 பேரை அவர்கள் பாதுகாக்கிறார்கள்.

மத்திய மாநிலத்தில், 100க்கு 49 பேர்களுக்கு வருமானம் இருக்கிறது, வேலைகள் கிடைக்கின்றன. மற்றுமுள்ள 51 பேர்களை அவர்கள் பாதுகாக்கிறார்கள்.

இந்த ஆறு பகுதிகளிலும் தெற்குப் பகுதி தான் மோசமான நிலையில் இருக்கிறது, இங்கு 100க்கு 31 பேருக்குத்தான் வருமானம் இருக்கிறது, வேலைகள் கிடைக்கின்றன. அதை வைத்து, அவர்களும் மற்றுமுள்ள 69 பேர்களும் வாழவேண்டும்.

வேலையுள்ளவர்கள் விகிதத்தில் தெற்குக் கடைசியாக இருக்கிறது, வேலையற்றவர்கள் விகிதத்தில் தெற்குதான் அதிகமாக இருக்கிறார்கள். மற்றெங்கும் இல்லாதபடி தென்னிந்தியாவில் குறைந்த வேலைகள் அதிகப் பேர்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு பகுதியிலும் 10 பேர்கள் வேலை பார்க்கிறார்கள் என்றால், அவர்களால் காப்பாற்றப்படவேண்டியவர்களின் தொகை கீழே கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் பகுதி	வேலையுள்ள ஒவ்வொரு 10 பேர்களால் பாதுகாக்கப்படவேண்டிய அதிகப்படியான பேர்கள்
1. வடமேற்கு	12
2. வடக்கு	14
3. கிழக்கு	17
4. மேற்கு	13
5. மத்திய	10
6. தெற்கு	22

தென்னாட்டில் வேலை வசதிகள் குறைவாயிருக்கின்றன, ஆதலால் வேலைபார்ப்பவர்கள் குறைவாக இருக்கின்றனர். அவர்களை நம்பியிருப்பவர்கள் அதிகம். மற்றெல்லா பகுதிகளிலும் இருப்பதைவிட அதிகமான பளு—அதிகமான வாழ்க்கைப்பாரம் தென்னாட்டில் தொழில் புரிபவர்களுக்கு இருக்கிறது. டில்லி மாநிலத்தில் பத்துபேர் சம்பாதித்து, தங்களுடன் மற்றும் 12பேர்களைக் காப்பாற்றுகிறார்கள்.

பம்பாய் மாநிலத்தில் 10 பேர் சம்பாதித்து, தங்களுடன் மற்றும் 13பேர்களைக் காப்பாற்ற வேண்டும்.

மத்திய மாநிலத்தில் 10 பேர் சம்பாதித்து, தங்களுடன் மற்றும் 10பேர்களைக் காப்பாற்றினால் போதும்.

ஆனால் தென்னாட்டில் 10பர் சம்பாதித்து, தங்களைக் காப்பாற்றிக்கொள்வதுடன் மேற்கொண்டு 22 பேர்களைக் காப்பாற்றவேண்டும்.

தென்னிந்தியாவில் குறைவான பேர்கள் சம்பாதித்து, அதிகமான பேர்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறதே, கிடைக்கும் சராசரி வருமானமாவது அதிகமா என்றால், அதுவுங் கிடையாது.

தென்னாட்டில் ஒரு ஆலைத் தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 300க்குக் குறைவாகக் கிடைக்கிறது. ஆனால் அதேவிதத் தொழிலைச் செய்கிற வடநாட்டுத் தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 600க்கு மேலாகக் கிடைக்கிறது.

முதலில் சொன்னபடி வடநாட்டில் 10 தொழிலாளர்கள். சம்பாதித்துவருவதை, அவர்களுடன் மேலும் 12 பேர்கள் பங்கிட்டுக் கொள்வார்கள். ஆக தலைக்கு ரூ. 273 அங்கு வருமானம் இருக்கிறது.

அதேபோல் தென்னாட்டைப் பார்த்தால், 10 தொழிலாளர்கள் சராசரி ரூ. 300 சம்பாதிக்க அவர்களுடன் 22பேர் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். ஆக தென்னாட்டில் ரூ. 93 தான் வரும், ஒரு ஆண்டுக்கு!

ஒரேவகை ஆலைத்தொழில் முறையில் ஈடுபட்டவர்களுடைய குடும்பங்கள் இரண்டை எடுத்து-ஒன்று வடநாட்டில், மற்றொன்று தென்னாட்டில் இருந்தால், **வடநாட்டில் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 273, தென்னாட்டில் சாசரி ஆண்டு வருமானம் ரூ. 93 !**

கோயம்பத்தூர் தொழிலாளர் குடும்பத்தில் இருக்கும் ஒருவன் பெறுவதை விட, மூன்று பங்கு அளவு அதிகமாக கான்பூர் தொழிலாளர் குடும்பத்தில் இருப்பவன் பெறுகிறான். வாழ்க்கை வசதி மூன்று பங்கு அதிகமாக அங்கு கிடைக்கிறது.

இந்த நிலை 1951ல்! முதல் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு முன்பே,

வட நாட்டில் தொழில் புரிவோர் விகிதம் 100க்கு 50 தென்னாட்டில் தொழில் புரிவோர் விகிதம் 100க்கு 30.

வட நாட்டில் தொழில் புரிவோர் தங்களைப் போன்று மற்று ஒரு பங்கினரைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. தென்னாட்டில் தொழில் புரிவோர் தங்களைப் போன்று இரண்டு பங்கினரைக் காப்பாற்றவேண்டும்.

தென்னாட்டிலிருக்கும் சராசரி வருமானத்தைவிட, வடநாட்டில் சராசரி வருமானம் அதிகம்.

மத்திய அரசாங்கம் நீதியும் நேர்மையும் உள்ளவகையில் நடந்திருக்குமானால் தெற்கின் நிலை உயரப் பாடுபட்டிருக்கவேண்டும்.

நடந்தது என்ன ?

முதல் ஐந்தாண்டுத்திட்டத்தின் மூலம் வடநாடு வளமாக்கப்பட்டது, தென்னாடு புறக்கணிக்கப்பட்டது.

வளர்ந்துள்ள வடநாடு மேலும் வளமாக்கப்பட்டது. தேய்ந்துள்ள தென்னாடு மேலும் தேய்க்கப்படுகிறது! இந்தச் சோகச் சித்திரத்தைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன!

ஒரு ஊர் வளமாகிறதென்றால், அந்த ஊரிலுள்ள அனைவருக்கும் வளம் அதிகமாக வேண்டும். அப்படியின்றி, ஆயிரம் ஏகரா நிலம் உடையவருக்கு இன்னும் நூறு ஏகரா கூடி, ஊரில் மற்ற பத்து ஏகராக்காரர்கள் இரண்டு ஏகராக்காரர்களாக ஆகிவிட்டார்கள் என்று சொன்னால் அது வளமாகிவிட்டதாக அர்த்தமல்ல! லட்சாதிபதி கோடீசுவரனாக, ஆயிரம் வைத்திருந்தவன் நூறு ரூபாய் அளவுக்குக் குறைவதுபோல, திட்டங்களால் வளர்ந்துள்ள வடக்கு மேலும் வளர்கிறது. நலிந்த தெற்கு மேலும் நலிவுக்கு ஆளாக்கப்படுகிறது.

தொழில் புரிவதற்கான வசதிகள் தென்னாட்டைவிட வடநாட்டில் 1951-ல் அதிகமிருந்தன. 1951—56-வரை போராடப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்த உயர்வு - தாழ்வு இன்னும் அதிகமாக்கப்பட்டு விட்டது.

பெரிய ஆலைகள் பிரமாண்டமான நீர்த் திட்டங்கள், தொழிற்சாலைகள் சுரங்கங்கள் வடநாட்டில் உருவாகும்பொழுது தென்னாட்டில் உள்ளவர்கள் பெரிய திருமொழிக்குப் புதிய பதிப்புப் போட்டும், குடிசைத்தொழில்-கைத்தொழில் மேன்மை பேசியும் வருகின்றனர்.

நிலை மாறவேண்டாமா? நீதி நமக்குக் கிடைக்கவேண்டாமா?

நடைபெறாத நாடகம்

[அருணன்]

[முன் இதழில்: தன் நண்பன் மதியுடன் உரையாடிக்கொண்டிருந்துவிட்டு, சோலையில் தன் காதலியுடன் பேசிக்கொண்டிருக்கிறான் மணி. "ஏதுமறியாதவளா நீ! இனியும் அவ்வாறு பேசாதே!" என்று கூறியவுடன் சற்று ஊடலுடன் எட்டச் சென்று நிற்கிறாள் கமலா.]

கம: நான் ஏதுமறியாதவளுமல்ல. எல்லாமறிந்ததாகச் சொல்லிக் கொள்ளவும் விரும்பவில்லை. ஆனால் நானறிந்தவரையில்தான் அவர் செயலைப்பற்றிக்கூறுகிறேன். இதுவரையில் அவர் செய்த நன்மை ஏதாவது யாருக்காவது உண்டா?

மணி: அவன் செய்யும் நன்மைகள் தனிப்பட்டவருக்கோ அல்லது தனிப்பட்ட சமுதாயத்திற்கோ அல்ல! "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் மற்றொன்றும் அறியேன் பராபரமே" என்று யாரோ பாடிச் சென்ற சொல்லின் இலக்கணம் அவன்.

கம: அப்படிஎன்று நீங்கள்தான் பாராட்டிப் புகழ்ந்து கூத்தாடுகின்றீர்கள். இவ்வளவு புகழ்ச்சியாகமட்டும் பேசி மகிழ்கின்றீர்களே-புகழ்கின்றீர்களே! நீங்களே சொல்லுங்களேன் அவர் யாருக்கு என்ன நலம் செய்தார்.

மணி: யாருக்கும் வேண்டாம்! உனக்கு, உன்னை நான் பெறுவதற்கு, நீயும் நானும் வாழ எந்தவித அல்லலும் இல்லாமலிருப்பதற்கு அவனுடைய அனுபவ மொழிகள் எவ்வளவு ஆதரவாயிருந்தது தெரியுமா? நான்கூட முதலில் எண்ணியபடியெல்லாம் இன்ப வாழ்வை எட்டிப்பிடித்திட முடியுமென்றுதான் எண்ணியிருந்தேன். அவன் எடுத்துக்காட்டினான் என் எண்ணங்கள் தவறென்றும் அவை நிகழ முடியாதென்றும் - நிகழ்த்தும் வகை யாதென்றும்.

கம: என்ன சொன்னார்!

மணி: முதலில் சமுதாயத்தை அறிவுக் களஞ்சியமாக்க வேண்டுமென்றும் அத்தகைய அறிவும் பெருந்தன்மையும் மிளிரும் சமுதாயத்திலே நாம் ஆனந்தவாழ்வு வாழ வேண்டுமென்றும் சொன்னான்.

கம: எலி ஒன்று பூனைக்கு மணி கட்டித் தானும் தன்னினமும் உயிர்வாழத்திட்டமிட்டதாம். கடலின் அலை ஓயவும்—அதன் பிறகு அமைதியான கடலில் உப்புச் சத்துக்கள் ஆழத்தில் படிந்து நல்ல நீராகவும் அப்போது நீராடவும் நினைப்போர் நெறிக்குச் சற்றுந் தாழ்ந்ததல்ல உங்கள் நண்பரின் உபதேசம். நடைபெறாத நிகழ்ச்சிக்கு நானாறு வழிகாட்டியிருக்கிறார். நீங்களும் அதை நல்லதென நம்பிவிட்டீர்கள். நானும் தங்களை நம்பி உயிர்வைத்திருக்கிறேன்.

மணி: உயிர் உன்னுடையது மட்டும் தனியாக இல்லையே. என் உயிரையும் அத்துடன் கலந்தல்லவா நான் வைத்திருக்கிறேன். எதையோ எண்ணிக்கொண்டு இப்படியெல்லாம் பேசாதே! சமுதாயச்சீர்திருத்தமென்றால் என்னவென்று உன்னால் உணர்ந்துகொள்ள முடியாது. அதனால் உன்மனம் போன போக்கில் கற்பனை செய்துகொண்டு வேதனை மொழிகளை வெளியிடுகிறாய்.

கம: வெளியிடவில்லை. உங்கள் நண்பர் கூறிய உபாயத்தைத்தான் சொல்லுங்களேன் கேட்கிறேன்.

மணி: கேள்! முதலில் ஆலயவழிபாட்டு முறைகளை அகற்றவேண்டும்.

கம: போதும்! உயிரற்ற உடலாக உலவ வேண்டும் என்று சொன்னால் இதனினும் பன்மடங்கு இனிக்கும். அத்தான் நம் ஒற்றுமையைப் பிரிக்கச் செய்யப்படும் செயலிது. இதை நம்பி ஏமாறாதீர்கள். புரியவில்லையா உங்களுக்கு. ஆலயப்பணிபற்றி அடாதபேச்செடுத்தால் ஊரிலுள்ள நல்லவர்கள் பெரிய மனிதர்களின் பகை ஏற்படும். அவர்களுக்கு நீங்கள் விரோதியாவீர்கள். சூழ்ப்பகையை வைத்துக்கொண்டு எப்படிவாழமுடியும் எங்காவது வெளியே சென்று—அறிவு உதயமாகும் ஊரில் சென்று வாழலாமென்று அடுத்து உங்கள்

நண்பரே இதோபதேசம் செய்வார். இதைக் கூடவா புரிந்துகொள்ள முடியவில்லை. அய்யோ அய்யோ! சிறுபிள்ளைகளுங்கூடத் தங்களுக்குத் தகாதது நேர்ந்தால் அதை அறிந்து கடந்து செல்லப் பழகியிருக்கின்றனவே. வயதில் வளர்ந்து - கல்வியில் உயர்ந்து - பட்டம் பெற்றுச் சிறந்திருக்கும் உங்களுக்கு இதுகூடவா தோற்றவில்லை.

மணி: உனக்கு ஏன் இதுபோன்ற விபரீத வழிகளில் புத்திதோன்றுகிறது என்பதுதான் விளங்கவில்லை. மிகச் சுலபத்தில் ஊரவர் கூறுவதுபோலவே நீயும் கூறிவிட்டாய். எத்தகைய சிறந்தவனின் தன்மையையும் ஏன் பிறர் உணர முடிவதில்லை என்பதை இப்போதுதான் அறிகிறேன்.

கம: எது வேண்டுமானாலும் சொல்லுங்கள் ஏற்றுக்கொள்கிறேன். அவர் கூறிய வழிகளில் மட்டும் செல்லாதீர்கள்.

மணி: ஏன்?

கம: காரணம் கேட்காதீர்கள்.

மணி: காரணமில்லாத ஒன்றைக் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ள நான் தயாராயில்லை.

கம: உங்களுக்கு என்மீது அன்பிருக்கிறதல்லவா?

மணி: இருக்கிறது.

கம: நம்பிக்கை.

மணி: உண்டு.

கம: தங்களுக்கு இன்னல் வரும் வழியை நான் ஏற்படுத்துவேனென்று நீங்கள் கருதுகிறீர்களா?

மணி: இங்கேதான் நீ தவறுகிறாய். என் நண்பன் கூறியன எனக்கு அழிவுதரும் என்று நீ அன்பின் மிகுதியால் எண்ணுகிறாய். என் அறிவு தரும் முடிவைக் கொண்டு நான் நிர்ணயிக்கிறேன், அவன் கூறுவன உண்மையென்று. அவன் உன்னைப்பற்றியும் கூறாமலில்லை. உன் அன்புக்குரியவர்களே இதை மறுக்கலாமென்றான். இருக்காதென்றெண்ணினேன் - இப்போது அறிகிறேன் அதன் மெய்ம்மையை.

கம: எப்படியோ என் இன்பத்திற்கு இடையூறுவந்து சேர்ந்துவிட்டது. இதுவரையில் தங்கள் முகத்தில் மாறுபாடும் பேச்சில் வேறுபாடும் நான் கண்டதில்லை. இப்போது காண்கிறேன்.

மணி: இதுவரை நான்செய்துவந்தது எத்தகைய தவறு என்பதை இப்போதுதான் உணர்கிறேன்.

கம: தவறா? அன்பாகப் பேசியதும்-ஆதரவாய் நடத்தியதும்-இனிமையுடன் பாராட்டியதும் தவறென்றா உணர்கிறீர்கள்!

மணி: இல்லை! என்னுடைய கருத்துக்குகந்தவளாக நீ இருக்கவேண்டுமென்பதை நான் முதன்மையாகக் கொள்ள மறந்ததுதான் தவறென்கிறேன்-ஆதலால்தான் தொடக்கத்திலேயே அதனை அகற்றிவிடமுனைகிறேன். எத்தனையோ உயர்ந்த கருத்தும் முற்போக்கும் உடையவர்கள் குடும்பத்தில், அவரை இழிவுபடுத்தும் முறைகளைக் குரங்குப் பிடியாகக் கையாளும் குடும்பத்தலைவர்கள்-குடும்பத்துணைவர்கள் இருப்பதை அறிவேன். அன்னவர்களின் நடைமுறைகளைக் காட்டியும் இடித்துக் கூறியும் இழிவுபடுத்துவதை அறிவேன். அவ்விதம் கூறவருபவர்கள், நேர்மையென்பதை உணரத்திறமற்றாலும் - மதியற்றாலும் இதுபோன்றவற்றைக் கூறமுற்படுகிறார்கள் என்றாலும் இழித்துரைப்பது விரும்பத்தகாதது. அன்னவர்களின் வேகமும் ஆவேசமுங்கூடத் தங்கள்வரையில்-தங்கள் குடும்பத்தில்-தங்களைச் சார்ந்தவர்களிடையில் தங்களால் தடுக்கக்கூடாதென நிலை பெற்றுவிட்ட காரணத்தால் தான் தீராநோய்க்கு மாறான மருந்து உட்கொள்ள முற்படுகிறார்கள். இந்த வகை என்குடும்பத்தில் இருக்கக் கூடாதென்பதுதான் என்விருப்பம். அதை அகற்ற முற்படுகிறேன். இதற்கு முழு உதவியாயிருப்பவனும், அறிவுத்துணைசெய்பவனும் மதிதான். அவனைநீ அவமதிக்கிறாய். இதை மிகச் சாதாரணமானவர்கள் கூறியிருந்தால் நான் வருந்தியிருக்கமாட்டேன். என் காதலி, என் அன்புக்குறியவள், என் இல்லத்துணைவியாகப்போகிறவள்; என்னால் நேசிக்கப்படுபவனை, என் தெளிவுக்கு உரியவனை முற்போக்குப் பாதைக்குத் துணையானவனைப் பற்றிக் கூறுகிறாளென்றால் நான் வருந்துகிறேன்.

கம: உங்கள் மனம் இவ்வளவு விரைவாக மாறிவிடும் மாற்றப்பட்டு விடுமென்று நான் நம்பவேயில்லையே! ஒரு நாள் கூட்டுறவில் இத்தனைமாற்றமென்றால் இன்னும் நாட்செல்லச்செல்ல என்னவாகுமோ! நானின்னும் என்னென்ன நிலைக்கெல்லாம் ஆட்படவேண்டுமோ! அத்தான்! நான் தங்களையன்றி வேறு கதியில்லை என்ற நம்பிக்கையுடன் உயிர் வாழ்கிறேன். உங்கள் விபரீதப்போக்கில் என் வாழ்வைப் பாழ்படுத்தி விடாதீர்கள். உங்கள் செயல் முறைகளெல்லாம் மாறுபடுமானால்

என் வாழ்க்கை எவ்வாறாகுமென்பதை என்னால் எண்ணிப்பார்க்கவே இயலவில்லை! வீணாக ஊரைப்பகைத்துக்கொண்டு ஊரவரை எதிரியாக்கி, யாவராலும் வெறுத்தொதுக்கப்பட்டு தனித்து நின்று நீங்கள் தவிப்பதைக் காண நான் விரும்புவதா? பரம்பரை பரம்பரையாக நடந்து வரும் ஒரு நல்லகாரியத்தை இடை வெளியில் ஏதேதோகாரணத்தைக் காட்டி எடுத்தெறியச் சொன்னால் யார்தான் ஒருப்படுவார்கள். அல்லது உங்கள் செயல்தான் உருப்படுமா? வேண்டாமத்தான்.

மணி: உன் நிலையை எப்படிச் சீர்செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. கமலா! என்னை அறிவற்றவனென்று கருதிவிட்டாயா? அல்லது நீ உபதேசித்து அதை உணர்ந்து வளரவேண்டிய மந்தமதியினனென்பது உன் எண்ணமா? என்னதான் எண்ணுகிறாய்! சரி-சரி! இப்படியெல்லாம் பேசி என் கோபத்தைக்கிளறுகிறாய். போ.... நாளை சந்திப்போம்.

கம: அத்தான்! என்றும் நாம் இவ்விதம் பிரிந்ததில்லையே 'நாளைவா' என்று சொல்வதிலும் ஒரு நயமிருக்குமே. இன்று அதுவுமல்லவா கொடிதாயிருக்கிறது. இனி அந்த நாள வராதா அத்தான்.

மணி: ஏதேதோ பேசி என்னைக் குழப்பத்திற்காளாக்காதே! உன் அறியாமைக்கும் மடமைக்கும் நான் அடிபணிய மாட்டேன். போ!

கம: இல்லையத்தான்! இனி நீங்கள் என்ன சொன்னாலும் ஒப்புக்கொள்கிறேன் கூறுகின்ற வார்த்தைக்கு மறுத்தே கூறமாட்டேன். மன்னியுங்களத்தான்....

மணி: மறுத்துக் கூறமாட்டாய்! மனதிலுள்ள எண்ணங்களைச் செயலில் காட்டுவாய். அது என்னைச் சிறிது சிறிதாக வதைக்கும். வேண்டாம். போ! உம். போய்விடு.

(போகிறான்)

கம: அய்யோ! என்வாழ்வு இப்படியா ஆகவேண்டும் சிறித்த முகமன்றிச் சினந்தமுகம் கண்டறியாத நான் அவர் சிவந்த கண்கள் தீ உமிழக்கூடிய அளவு கண்டித்து வெறுக்கத் தகுந்தவளாகி விட்டேன்! என் செய்வேன். இனி அவரை எப்படிச் சென்று காண்பேன். அவராக இனி இங்கு வரவும்மாட்டார். இது தானா என் கதி.

(புலம்பியவாறே போகிறாள்.)

(மதி ஒருபுறம் தனிமையில் உட்கார்ந்து)

மதி: நான்வாழத் தவிக்கிறேன் வாழ்க்கை என்னைக் கண்டு ஓடத்துடிக்கிறது. இந்த எண்ணம் எனக்கேற்படுதல் தவறா? ஆமாம்! ஏழைக்கு ஏது இன்பஎண்ணத்திற்கு உரிமை. அதிலும் என் நிலையைக் கண்டோரும் கேட்டோரும் நகைப்பர். நான் கருதுகிறேன் வாழவேண்டுமென்று. என் இதயம் என்னையே இடித்துக் காட்டுகிறது "எடா அன்னக்காவடி! ஏனடா உனக்கு இத்தகைய எண்ணங்கள்! நீ கெட்ட கேட்டிற்குக் காதல் ஒரு கேடா! உன் நிலையை எண்ணிப்பார். நித்திய தரித்திரன் நீ! பஞ்சத்தின் ஒவ்வொரு அவதாரமும் உன்னிடம் குடிகொண்டிருக்கிறது. வயனமான உடை, வளமான உணவு, வண்ணமான இருக்கைகள் வகைவகையான அணிபணிகள் இவற்றின் சொந்தக்காரி அவள்! ஒன்றன்றி மற்றில்லா உடையாண்டி நீ! பட்டினியின் சொந்தக்காரன், சத்திரஞ்சாவடிச்சஞ்சாரகன். கோலாகலத்தின் குலவைரி அடுக்குமா கிடைக்குமா கிட்ட எட்டத்தான் எத்தனிக்கலாமா" என்று. அவைகள் உண்மைதானா? அவள் என்னைக் காதலிக்கிறாளென்பதைத்தான் நானெவ்வாறு கருதக் கூடும். பார்ப்பதற்கும் - பரிவுகாட்டுவதற்கும் - பக்கம் வருவதற்கும் காதலென்ற பெயர் எவ்வாறு பொருந்தும்? ஆனால் என் உள்ளம்மட்டும் அவளை அகலாது சுற்றித்திரிகிறதே ஏன். அவளை ஒருநாள் கூடக் காணாமலிருக்க முடியவில்லை. எப்படியாவது அவளிடம் பேச எத்தனிக்கிறேன். வரம்புமீறிப் பேசிவிடலாமா என்று வாய்துடிக்கிறது, மனம் மறுக்கிறது. ஆர்வத்தால் அடாதன செய்து விடலாமா என்று ஆசை தூண்டுகிறது, அறிவு தடுக்கிறது. காதல் எப்படித்தான் பிறக்கும் என்ற வழி வகைகள் பலவற்றைப் பிறருக்கு நான் எடுத்துச் சொல்வதுண்டு; அவைஎன்வரையில் எங்கோசென்று மறைந்துவிடுகிறது. இது சரியாதவறா என்று நிர்ணயித்துக்கொள்ளவே இயலவில்லை. அவளென்னை வெறுப்பதாகவும் உறுதிசெய்ய முடியவில்லை. அவள் வகையில் என் உறுதிப்பாடெல்லாம் உருக்குலைகிறது. நான் இத்தகைய எண்ணம் கொண்டிருப்பதை அவள் அண்ணன் அறிந்தால்! என்னை ஆதரிப்பவன் என்மீது அளவுகடந்த அன்பு கொண்டவன்- என்வரையில் எந்தவித மனமாறுபாடுமில்லாதவன் அவன் என்நிலையை அறியவும் வேண்டும். அறிந்தால் என்னநேருமோ என்றஞ்சுகிறேன். என் அச்சம் என் எண்ணத்தைச் சிதைப்பதாகுமோ! அல்லது அஞ்சியிருக்கிறேனென்பதை அவளறிந்துகொண்டு என்

மீதுள்ள நம்பிக்கையை இழந்துவிடுவாளோ! (தனக்குள் சிரித்து என்ன பேதமை! பிறக்காத பிள்ளைக்கு நிழலால் தொட்டில் கட்டினாளாம் ஒரு ஆசையில் மிகுந்த தாயார். அதேபோல் அவள் எண்ணம் எதுவென்பதே அறியாமல் வெறுப்பு விருப்புக்குக் கணக்கிட ஆரம்பித்துவிட்டேன். அவன் மறுக்கமாட்டானென்றே நம்புகிறேன். எப்படி உறுதிசொல்ல முடியும். எத்துணைதான் பொதுநலத்தில் நாட்டமிருந்தபோதிலும் தன் சொந்த விவகாரத்தில் அவ்வாறே இருப்பானென்று எப்படி நம்ப முடியும். யாவற்றிற்கும் மாறாக நான் பொதுநலம் பேசியதெல்லாம் இந்த அடிப்படையில்தானென்று எண்ணிவிட்டால் என் செய்வேன்! உம்...என்றேனும் இதற்கொரு விடிவு ஏற்படத்தானே வேண்டும்...

ஆ! அதோ அவனே வருகிறான். தனித்திருக்கும் இந்தவேளையில் என் எண்ணத்தை வெளியிட்டால்.

(மணி அண்மையில் வந்து)

மணி : மதி! ஏனிங்கு தனிமையிலிருக்கிறாய்! ஹ-ஹ-ஹ. உனக்கேது தனிமையும் கூட்டும். உண்மையில் நீ ஒரு அமைதியானவன்தான். உன்வரையில் எந்தத்தொல்லையும் கிடையாது.

மதி : என்றுதான் எல்லோரும் எண்ணுகிறார்கள். ஆனால் என்னுள்ளே இருந்தும் உடற்றும் எண்ணற்ற சிந்தனைகள் என்னை இடியேற்ற மரமென ஆக்குகிறது.

மணி : அந்த எண்ணங்களெல்லாம் என் போன்றார் தலையிட்டால்-அல்லது நீ எதிர்பார்ப்போரிடம் ஏற்பாடு செய்துவிட்டால் தீர்ந்துவிடும். என் நிலை அப்படியில்லையே. விள்ளவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இரண்டுமற்ற நிலையிலல்லவா தவிக்கச் செய்கிறது.

மதி : ஓஹோ! அதுவா. இப்போதுதான் புரிகிறது. உண்மைதான். உன் துயரைத் துடைக்கமற்றவரால் இயலாது. என்றாலும் குறைக்க முயற்சிக்கலாமல்லவா? சொல். என்னசெய்தி. வரவில்லையாக்கும் அவ்வளவுதானே. என்ன தொல்லையோ. எத்தனை இடையூறோ. உன்னைப்போன்றே எல்லோரும் இருப்பார்களென்றோ இருக்கவேண்டுமென்றோ முடிவு செய்து விடலாமா! பொறுக்கவேண்டியதுதான்.

மணி : வராமலிருந்தாலோ. வந்து உடனே சென்றுவிட்டாலோகூடக் கவலைப்படமாட்டேன்.

மதி : காதலுக்கு மறுப்பா?

மணி . நான் எண்ணுகிறேன் மறுக்க.

மதி : மணி! தவறானதும்-தகாததும் கூட. உன் ஆத்திரமுடிவுகள் அமைதியின்மையை உண்டாக்கிவிடும். இந்த அமைதியை மீண்டும் உரியவாறு பெறுவதென்றாலும் பெற்றாலும் முன்போல் இருக்க இயலாதென்பதும் நீ உணரமாட்டாய்.

மணி : அதற்காக அறிவற்றவற்றை ஆமோதித்துக்கொண்டும் - தன் கருத்துக்கொரு எதிரியைத் தன் உடைமையாக ஏற்றுக்கொண்டும் இழிவை எதிர்கொண்டழைத்துக்கொண்டும் எப்படியிருக்கமுடியும்...

மதி : புரிந்துகொண்டேன். நன்றாகப் புரிந்துகொண்டேன். இல்லை நம் புதிய ஏற்பாட்டு முறைகளை அந்த ஏந்திழையாளிடம் தெரிவித்திருப்பாய். அவள் ஏற்றுக்கொள்ள மறுத்திருப்பாள். உடனே எழுந்திருக்கும் கோபம் உனக்கு. ஏதேதோ பேசி அனுப்பிவிட்டு இங்கு வந்து எண்ணமிட்டுக்கொண்டிருக்கிறாய்.

மணி : ஆம்! அவளை எப்படி மறப்பது என்று.

மதி : தகாத செயல், மணிவண்ணா! காதலைப் பெறுவது எத்தனைவித இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் ஆளாக்குகிறதோ அதேபோல் காதலை இழப்பதும் எண்ணற்ற துன்பங்களையும் வேதனையையும் தரும். முதலிலேயே சொன்னேனே ஆத்திரம் கோபம் இவை அறிவைக் கெடுத்துவிடுமென்று. பார்த்தாயா நான் சொன்னதற்கேற்பவே நடந்துகொண்டாய். அப்போதே நினைத்தேன் நீ சொல்லும்போது சொல்லி அனுப்ப வேண்டுமென்று. இத்தனைவிதம் எடுத்துச் சொல்லியிருக்கிறோமே என்றுதான் பேசாதிருந்தேன்.

மணி : என் செயல் முறைகள் தவறு என்கிறாயா?

மதி : நிச்சயமாக!

மணி : என் மனப்போக்கையே அடியோடு மாற்ற எத்தனிக்கும் அவள் செயலுக்கு ஒத்துப்போகவேண்டுமென்கிறாய். எப்படி முடியும். தொடக்கத்திலேயே ஏற்படும் முட்டுக்கட்டையை எடுத்தெரிந்துச் சென்றால்தான் எண்ணியதைச் செயல்படுத்த முடியும்.

மதி : தவறான கருத்து! உன் செயல்களில் கொள்கைகளில்-கருத்தில் உனக்கே நம்பிக்கையில்லையே!

(அட்டைப்படம்)

பேராசிரியர் பெர்ட்ரண்ட் ரசல்

(சோழன்)

எகிப்துமீது ஈடன் அரசாங்கம் படைகளை அனுப்பியபொழுது, இங்கிலாந்தில் பலத்த கண்டனம் எழுந்தது. அவற்றில் மிகக் கடுமையான கண்டனம்—"பைத்தியக்காரத்தனமான வெறிச்செயல்" என்ற கண்டிப்பு பேரறிஞர் ரசல் என்பவரிடமிருந்து வந்தது. அவர் தத்துவ ஞானி, அரசியலில் அன்றாடக் கொந்தளிப்புகளுக்கு அப்பாற்பட்டவர். இருந்தாலும், அநீதியொன்று நிகழ்ந்துள்ளது என்றதும், அது இழைக்கப்பட்டது தனது நாட்டின் பிரதம மந்திரியால்—அரசாங்கத்தால் என்று தெரிந்ததும், அந்த அறிவாளர் கண்டிக்கத் தயங்கவில்லை. கண்டிக்கவேண்டும் என்ற அளவுக்கு மட்டும் கண்டித்துவிடவில்லை, கடுமையான சொற்களால் கண்டித்தார்.

அவருக்குத் தற்பொழுது வயது 84. தள்ளாத வயது-நீண்ட உழைப்பின் பிறகு ஓய்வு வேண்டியகாலம். இருந்தபோதிலும், தனது நாடு எகிப்தின்மீது அநீதி விளைவிக்கின்றது என்றதும், தனது நாடு என்றும் பாராமல் கண்டிக்க முன்வந்தார்.

அறிவாளர் ரசலின் வாழ்நாள் பூராவும், அநீதிகளை, பொய்களைத் தேடிப்பிடித்துக் கண்டிப்பதில் செலவழிக்கப் பட்டுள்ளது என்று கூறலாம். அநீதியைக் கண்டிக்க அவர் என்றும் தயங்கியதில்லை. பொய்யை எடுத்து வெளிப்படுத்த அவர் பின் வாங்கியதில்லை. அது பிரதம மந்திரியானாலும்; போப் பாண்டவராயிருந்தாலும் சரி, அவர்களை எதிர்த்துப் பேசத் தயங்கியதில்லை. நீதிக்காகப் பரிந்து பேசிய "குற்றத்துக்கு" இன்னல்களை அவர் ஏற்றிருக்கிறார்.

பேரறிஞர் ரசலின் வாழ்க்கை வரலாறு மிக வேடிக்கையானது. அவர் பிறந்தது ஒரு பிரபுக் குடும்பத்தில்! "ரசல்" குடும்பம், பல நூற்றாண்டுகளாகப் பிரசித்திபெற்ற அரசியல் பிரபுக் குடும்பம். அதைச் சேர்ந்த பலர், அரசியலில் மதிப்பு வாய்ந்தவர்களாக இருந்துள்ளனர். பெர்ட்ரண்ட்ரசலின் பாட்டனார் ஜான் ரசல் என்பவர் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்தார். தந்தையைப்போல, பெர்ட்ரண்ட் ரசலின் தாயும் பிரபு வம்சத்தில் பிறந்தவள். பிரபுக்கள் சூழ்நிலையில் பிறந்த ரசல், பிற்காலத்தில் அந்தப் பட்டத்தை வேண்டாமென்று ஒதுக்கும் நிலைக்கு வந்தார்.

ரசலின் முழுப்பெயர், "பெர்ட்ரண்ட் ஆர்தர் வில்லியம் ரசல்" என்பதாகும். அவர் பிறந்தது 1872 மே மாதம் 18ல். அவருக்கு மூன்று வயதாகும் பொழுது தாய் இறக்க, பாட்டியாரால் (தாயின் தாயார்) வளர்க்கப்பட்டார். பாட்டி பிரபுக்களின் பெருமையில் திளைத்தவராதலால், பேரனைச் சன் மார்க்கனாக, கிருத்துவ மதக் கோட்பாடுகளில் நம்பிக்கையுள்ளவனாகக் கொண்டுவரப் பாடுபட்டார். மாளிகையில் மதகுருவும் மற்ற ஆசிரியர்களும் வந்து பாடஞ்சொல்லித்தந்தனர். பிரெஞ்சு, சேர்மன் மொழிகளை அவர் நன்கு கற்றுக்கொண்டார்.

பதினெட்டாவது வயதில் ரசல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். "அதிகம் பேசாத, கூச்சமுள்ள" மாணவனாக இருந்தார். அவர் எடுத்திருந்த பாடம், முதலில் கணிதம் பின் தத்துவம். இரண்டு அறிவுத்துறைகளும் அவரை எப்பொழுதும் சிந்தனையில் ஆழ்த்தி வைத்திருந்தன. பல்கலைக்கழக முடிவுகளில், ரசல் முதலாவதாக, அதிகச் சிறப்புகளுடன் தேறினார்.

குடும்பப் பழக்கப்படி, ரசல் அரசியலில் ஈடுபடுமாறு செய்யப்பட்டார். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் பொழுது பாரிசிலிருந்த ஆங்கிலத் தூதுவர் அலுவலகத்தில் அவருக்கு ஒரு வேலை காத்திருந்தது. அங்கு சிலமாதங்கள் தங்கியதும், பெர்லின் நகர் சென்றார். அவருடைய மனப்போக்கு வேறு துறைகளில் ஈடுபட்டிருந்ததால், அரசியல் வேலைகளில் அவருடைய ஆர்வம் செல்லவில்லை. பெர்லினிலிருந்து திரும்பி வந்து தன் மனைவி

யுடன் (அவர் பாரிசு சென்ற ஆண்டு அதாவது 1894ல் திருமணம் புரிந்துகொண்டார்) இங்கிலாந்துக்குத் திரும்பி வந்தார். ஒரு சிற்றூரில் போய்க் குடியேறி, தத்துவ ஆராய்ச்சியில் தன் முழுநேரத்தையும் செலவிட்டார். பிரபுப் பட்டங்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. பரம்பரையாக வந்த பெருமையை அவர் ஏற்றுக்கொள்ள அவர் மறுத்தார். வீட்டிலிருந்து—பிரபுக் குடும்பத்தவர் என்ற பரம்பரை உரிமையிலிருந்து வரும் பணத்தை அவர் எடுத்துக் கொள்ளவில்லை. சொந்த உழைப்பால் பொருள் தேடி, மிக எளிய வாழ்க்கையை அவர் மேற்கொண்டார். கணிதத்தையும், தத்துவத்தையும் நாள் பூராவும் ஆராய்ந்ததால், அவருடைய அறிவுத்திறன் வளர்ந்ததென்றாலும், உடல் மிகவும் தேய்ந்து வந்தது. "எலும்புகளின் மீது நடமாடும் வாய்ப்பாடு போல அவர் இருந்தார்" என்று அப்பொழுது அவரைப் பார்த்த ஒருவர் குறிப்பிட்டார்.

1900ல் பாரிசு நகரில் "கணித மாநாடு" ஒன்று நடந்தது. அதற்கு ரசல் சென்றிருந்தார். அப்பொழுது நடந்த விவாதங்கள் ரசலின் கவனத்தை கணிதத் துறைக்கு முழுவதும் ஈர்த்தன. இங்கிலாந்து திரும்பியதும், மூன்று ஆண்டுகள் கணிதத் துறையின அடிப்படைகளை ஆராய்ந்தார். 1903ல் "கணிதத்தின் அடிப்படைகள்" என்ற அவருடைய நூல் வெளிவந்தது. பிறகு கணிதப் பேராசிரியர் வொயிட்கெட் என்பவர் துணையுடன் "பிரின்சிபியா மாத்தமாட்டிக்கா (கணிதக் கோட்பாடுகள்) என்று நூலை எழுத ஆரம்பித்து, 1910ல் அதை வெளியிட்டார். கணிதத் துறையில் தலை சிறந்த நூல்கள் வரிசையில் இந்த இரண்டும் இடம் பெறுகின்றன. 20ம் நூற்றாண்டின் முதற் பாதியில் வெளிவந்த ஒரு சில உயர்தர நூல்களில், கணிதம்பற்றி ரசல் எழுதிய நூலும் ஒன்று.

1910ல் ரசல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பல்கலைக் கழகச் சூழ்நிலையில் ரசல் கணிதத்திலும், தத்துவத்திலும் முன்னிலும் அதிக ஆர்வத்துடனும் ஈடுபட்டிருந்தார். சிந்தனையில் மூழ்கி, வெளியுலகை ரசல் மறந்திருந்தார். ஆனால் 1914ல் வெளியுலகு அவரைத் தட்டி எழுப்பியது, அதிர்ச்சியுடன்! 1914ல் மூண்ட முதல் உலகப் போர் அவரைச் சிந்தனை உலகிலிருந்து மண்ணுலகுக்கு அழைத்து வந்தது! வாய்பாடு, கொள்கை, கோட்பாடு, ஆரம்பம், முடிவு: அடிப்படை உண்மை, இவைகளில் உழன்று கொண்டிருந்த மனம், சேனைகள், துப்பாக்கி, சண்டை, இரத்தம், சாவு இவைகளைப் பார்த்துத் திடுக்கிட்டது.

கணிதத்தையும், தத்துவத்தையும் கொஞ்சம் ஒதுக்கிவைத்து, "சண்டை கூடாது" என்று பிரசாரம் செய்ய ரசல் இறங்கினார். எதிரி நாடு மட்டுமின்றி, தனது நாடும் குற்றங்கள் செய்துள்ளன வென்று அவர் இடித்துக் காட்டினார். போர் முயற்சிகளுக்குத் தடையாக இருப்பதாக ரசல் குற்றஞ் சாட்டப்பட்டார். ரசல் கோர்ட்டில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார். "பிரபுவின் பிள்ளை - பேராசிரியர் குற்றவாளிக் கூண்டில்" என்ற செய்தி, நாட்டில் ஆச்சரியத்தையும், மற்றொரு பக்கம் அதிர்ச்சியையும் தந்தது. தான் சொல்லியதையோ, எழுதியதையோ எதையும் திரும்ப வாங்க ரசல் மறுத்தார்.

கோர்ட் அவரைக் குற்றவாளி யெனத் தீர்ப்புக்கூறி, 100 பவுன் அபதாரம் விதித்தது.

அவர் செய்த குற்றமென்ன? "போர் கூடாது, அமைதி வேண்டும்" என்று கூறியது.

அபராதம் கட்டப்படவில்லை. ரசல் கடுங் கோபத்துடன். அரசாங்கத்தை எதிர்த்து நின்றார் அரசாங்கத்தினர் அபராதத்தை வசூலிக்க உத்தரவிட்டனர்.

போலிசார் ரசலின் வீட்டில் புகுந்தனர். பேராசிரியர் வீட்டில் என்ன இருக்கும்? புத்தகங்கள் ஏராளமாக இருந்தன. அபராதத்திற்காக ரசலின் புத்தகங்கள் கைப்பற்றப்பட்டன. தான் அருமையாகப் போற்றி, நண்பர்களைப் போலப் பாராட்டி வந்த பல நூல்கள் அகற்றப்படுவதை ரசல் வேதனையுடன் பார்த்தபடி இருந்தார். அரசாங்கம் கைப்பற்றிய புத்தகங்களை ரசலின் நண்பரொருவர் ஏலத்தில் எடுத்து, ரசலிடம் திருப்பிக் கொடுத்தார். ஆனால் பல அருமையான நூல்கள் காணமற் போய்விட்டன.

அரசாங்கத்தின் தாக்குதல் ஒரு புறமிருக்க, மற்றொரு பக்கம பல்கலைக் கழகம் தாக்கியது. ஆசிரியர் பதவியிலிருந்து ரசல் நீக்கப்பட்டதாக உத்தரவு வந்தது.

கேம்பிரிட்ஜில் வேலை போனதும், அமெரிக்காவில் ஆர்வர்டு பல்கலைக் கழகம் ரசலுக்கு ஆசிரியர் பதவி தந்து அழைத்தது. ஆனால் அமெரிக்காவுக்குப் போக ரசலுக்குப் "பாஸ் போர்ட்" வழங்க இங்கிலாந்து அரசாங்கம் மறுத்தது. ரசலுக்கு உள் நாட்டில் வேலை

போயிற்று; வேலை நாட்டில் வேலை பார்க்கப் போவதற்கும் அனுமதிக்கப்படவில்லை. அரசாங்கத்தின் கடும் தாக்குதல் ரசலை வறுமை நிலையில் தத்தளிக்கச் செய்தது. இந்தக் கட்டத்தில் கூட, தன் பரம்பரைச் சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பெற ரசல் மறுத்தார். பிரபு — சாதாரணமானவர், முதலாளி-தொழிலாளி என்ற பாகுபாடுகள் ஒழியவேண்டுமென வாதிப்பவர். ரசல் அந்த வேற்றுமைகளை எதிர்க்கும்பொழுது, அதனால் சொந்தமாகப் பலன் வருகிறதென்றாலும், தியாகம் செய்ய அவர் முன்வந்தார். உள்ள உறுதியை இழந்திடாமல் அவர் அரசாங்கத்தின் கொடுமைகளை ஏற்றுப் போராடினார்.

பல்கலைக்கழக வேலை போனதும், இலண்டனில் சில சொற்பொழிவுகள் தந்து வருவாய் தேடித்தர, ரசலின் நண்பர்கள் ஏற்பாடு செய்தனர். அறிவாளர்கள் பேசுகின்றனர் என்றால் நுழைவுக் கட்டணம் வைத்து, பொருள் தேடும்முறை அங்கு இருந்தது. மக்களும்கூடி பேச்சுக்களைக் கேட்டுச் செல்வர். ரசலுக்கு அவ்விதக் "கட்டணக்கூட்டங்கள்" ஏற்பாடு செய்வதை அறிந்த அரசாங்கம், அந்தக் கூட்டங்களுக்கு வெவ்வேறு வகைகளில் தடைபோட்டு நடைபெறாதபடி செய்தது.

ரசல் இவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை. சொற்பொழிவுகள் தடுக்கப்பட்டதும், பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதி அதனால் கிடைக்கும் வருவாயைக்கொண்டு தம் வாழ்க்கையை நடத்தினார். அரசாங்கம் அங்கும் ரசலை விட்டுவைக்கவில்லை. "டிரிபுயுன்" என்ற பத்திரிகையில் ரசல் எழுதிய கட்டுரை ஆட்சேபகரமானது என்று கூறி, ரசல் மீது வழக்குத் தொடுத்தது.

பெர்ட்ரண்ட் ரசல் ஆறுமாதம் தண்டிக்கப்பட்டார்.

தனது கருத்துக்களை மாற்றிக்கொள்ள அவர் மறுத்தார். தண்டனையை ஏற்றுக்கொண்டார், சிறைபுகுந்தார்.

தத்துவங்களை ஆராய்ந்து, வேதாந்தம் பேச வேண்டியவர், பல்கலைக்கழக அறைகளுக்கு அப்பாற்பட்ட உலகில் புகுந்து, கலகம் விளைத்து, கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டது உலகுக்கு அதிர்ச்சியைத் தந்தது. ரசலைப்பற்றி எழுதிய வில்டுராண்ட் என்ற அமெரிக்க தத்துவஞானி பின்வருமாறு குறிப்பிடுகிறார். "இதுவரை கணிதம் தத்துவம் இவைகளின் பாரந்தாங்காது அமிழ்ந்துபோய், உறைந்துபோன பனிக்கட்டியைப் போலக் கிடந்த பெர்ட்ரண்ட் ரசல் திடீரென வெடித்து எழுந்தார். பனிக்கட்டி உறைந்தது, தீப்பொறி பறந்தது, உலகம் திடுக்கிட்டது. அவர் ஒற்றை நாடியாகவும் இரத்த சோகையால் வெளுத்தும் காணப்பட்ட பேராசிரியர் மட்டுமல்ல, உயர்ந்த மனிதாபிமானமும் அளவற்ற மனவுறுதியும் படைத்த மனிதர் என்பதை உலகம் உணர்ந்தது. அறிவியல் கோட்பாடுகளை விட்டு ஆராய்ச்சியாளன் வெளியே வந்தான். அரசியல் வாதிகளைச் சாடினான், கடும் கண்டனங்களை வெள்ளமெனப் பாய்ச்சினான். அதிகாரம் பதவி எதுவும் எதிர் நிற்கவில்லை. அதிகாரமும் ஆதிக்கமும் கையிலே வைத்துப் பாரைக் கட்டி ஆண்ட அரசியல் தலைவர்களும் அவரது கண்டனத்துக்கு ஆளாயினர். பல்கலைக் கழகம் அவரை வேலையின்றும் விரட்டியபோதிலும் கண்டனம் நிற்கவில்லை. மற்றொரு கலிலியோவைப்போல அவர் போராடினார். அவருடைய அறிவையும் கருத்துக்களையும் புரியாதவர்கள்கூட, அவருடைய கொள்கை உறுதிகண்டு வியந்தனர். ஆனால் அவருடைய கருத்துக்கள் பல, இங்கிலாந்தில் இருந்தவர்களுக்குக் கசப்பாக, கடுமையாக இருந்ததால், எதிர்ப்பு நாலாபக்கலிலும் சூழ்ந்தது. பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றாலும், சமூகம் அவரை விரட்டியடித்தது, சண்டையிலீடு பட்டிருந்த நாடு சமாதானம் பேசிய அவரைத் "தேசிய துரோகி" எனத் தூற்றியது.

படித்த பல்கலைக் கழகம்— ஆசிரியராகப் பணியாற்றிய பல்கலைக்கழகம் அவரை விரட்டியது! பிரபுக்களை விட்டு அவர் விலகி வந்தார். பிரபுக்கள் கூட்டம் இப்பொழுது தூர நின்று அவர் படும்பாட்டை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது!

அரசாங்கத்தின் கோபம் அவர்மீது பாய்ந்தது; அவரைச் சுற்றி தடைகள் வீசப்பட்டன!

சமூகம் அவரைப் புறக்கணித்தது, சட்டம் அவர்மீது குற்றங்களைச் சாட்டியது, தண்டனைகளைத் தந்தது, சிறைக்கு அனுப்பியது!

பிறந்த நாடு அவரைத் "தேசத்துரோகி" எனத் தூற்றியது!

இவ்வளவுக்கும் அவர்செய்த குற்றம், சமாதானத்திற்காகப் பேசியதுதான்.

சமாதானத்திற்காக அவர் பேசினார், சண்டையில் ஈடுபட்டிருந்த அரசாங்கம் அவரை அல்லற்படுத்தியது.

அமைதி வேண்டுமென்று அவர் கூறினார்; அதிகாரத்திலிருந்தவர்கள் அவரைத் தண்டித்தனர்.

ஏகாதிபத்தியங்கள் போகவேண்டுமென ரசல் கூறினார்; ஏகாதிபத்தியத்தின் தலைமை பீடமாக விளங்கிய இங்கிலாந்து, "தேசத் துரோகி" என அவரைத் தூற்றியது, கொடுமைப் படுத்தியது.

தாம் படும் கொடுமைகளை ரசல் பொருட்படுத்தவில்லை. சண்டை வெற்றி இவைகளின் பின் மறைந்துள்ள பயங்கரக் கொடுமைகளை எண்ணி, அவர் மனம் பதறினார். அந்தக் கொடுமைகளை வெளிப்படுத்துவதற்காக தான் கொடுமைகள் அனுபவித்தாலும் பாதகமில்லை என்று அவருக்குப் பட்டது. ஒரு ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்ற, பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் படைகளில் அணிவகுத்துச் செல்வதைக்காண, அவர் மனம் புழுங்கினார். "ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்ற எண்ணற்ற இளைஞர்கள் பலியிடப்படுகின்றனர்! இந்த இளைஞர்களின் உயிர்களைவிட, ஏகாதிபத்தியப் பெருமை பெரிதா?" என்று ரசல் கேட்டார். ஏகாதிபத்தியவாதிகளுக்கு மட்டுமல்ல, இங்கிலாந்து மக்களுக்கே ரசல் பேசுவது தேசத்துரோகமாகப்பட்டது. ரசல், அத்துடன் நிற்கவில்லை, "இலட்சக் கணக்கான இளைஞர்களின் தூய இரத்தத்தைச் சிந்தி, காப்பாற்றப்போவதாகச் சொல்லப்படும் அந்த ஏகாதிபத்தியம் என்பதுதான் என்ன?" என்ற ஆராய்ச்சியில் இறங்கினார். கணிதத்தில் தத்துவஞானத்தில் ஈடுபட்டிருந்த அவரது ஆராய்ச்சித் திறமை பொருளாதாரம் அரசியல், சண்டை, சமூகம், ஏகாதிபத்தியம் இவைகள் பக்கம் திரும்பியது. ஏகாதிபத்தியத்தின் தன்மையை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, பொருளாதார அமைப்புக்களை ரசல் சீர்தூக்கிப்பார்த்தார். தனிப்பட்ட சொத்துக்களின் அடிப்படையில் ஏழை - பணக்காரர்கள் உண்டாவதுதான் சமூகத்தில் பலசீர்கேடுகள் தோன்றக் காரணமாயிருக்கிறது என்று அவர் கண்டார். எனவே இக்கேடுகளை நீக்க சமதர்மம்தான் சிறந்த மருந்தென அவர் தெளிந்தார். சமதர்மத்தைப்பற்றி அவர் பேசத் தொடங்கியதும், அவரைச் சூழ்ந்த எதிர்ப்பு இன்னமும் அதிகமானது.

கணிதவல்லுநர், தத்துவஞானி, இவைகளிலிருந்து யுத்தத்தை எதிர்க்கப்போய் "தேசத் துரோகி"யாகி, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சமதர்மவாதியாக ரசல் ஆனார். அடுத்தகட்டத்தில் மதங்களை எதிர்த்து மதத்துரோகியாகவும் அவர் ஆனார்.

(அடுத்த இதழில் முடியும்)

"மன்றம்" பொங்கல் மலர்
1957

சென்ற ஆண்டினும் சிறந்த முறையில்
மலர் மணம் தரும்.

கலைஞர்கள் - அறிஞர்கள் - கவிஞர்கள்
பலரின்
கட்டுரைகள் - கதைகள் - கவிதைகள்
இடம்பெற்று
அறிவுக் குவியலாக மலர் திகழும்.
மூவண்ண முகப்புடன் முத்தமிழ்ச் சுவையுடன் மலர் மிளிரும்.

விலை ரூபாய் ஒன்றுதான்.

ஊடலைத் தீர்க்கும் மருந்து!

[இரா. நெடுஞ்செழியன்]

தன் காதற்கினிய இல்லக்கிழத்தியைத் தனியே விட்டு விட்டுப், பரத்தையின்மேல் கொண்ட காமவேட்கையின் காரணமாகப் பரத்தையர் சேரிப் பக்கம் செல்கிருன் தலைவன. தலைவனது அழகுத்தோற்றத்தையும், செல்வச் செழிப்பையும் கண்ட சேரிப்பரத்தையரிலே வனப்பு மிக்க ஒருத்தி தலைவனை மயக்கித் தன் வயப்படுத்திக் கொள்கிருள்.

பரத்தையின் காமவின்பத்தில் திளைத்துக் கிடக்கும தலைவன் தன் அருமைக் காதலியையும், வீடு வாசல்களையும், தோட்டம் துறைகளையும் மறந்து, பரத்தையின் இல்லமே பேரின்பவூற்று என்று கருதி அங்கேயே வாளா இருக்கிருன்.

தலைவனைக் காணப் பெருத தலைவி, பெருந் துக்கத்திலும், துயரத்திலும் ஆழ்ந்து, பொலிவிழந்து, வாடி, வதங்கிக் காணப்படுகிருள். தன் அருமைத் தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்து விட்டானே என்று எண்ணி எண்ணி ஏக்கமுறுகிருள். தன் இளமைததும்ப, எழிலும் ததும்பக், காதல் ததும்பக், கண்ணீர் ததும்பி வருந்துகிருள். தலைவன் எங்கே போயினனே, யாரேனும் கள்வர்கள் அவனை இட்டுச் சென்றனரோ, விலங்குகள் ஏதேனும் அவனுக்குத் தீமை விளைத்ததோ, அவனது உயிருக்கு ஏதேனும் கேடு ஏற்பட்டதோ என்று பலவாருக எண்ணி எண்ணி ஏக்கமுறுகிருள்.

தலைவன் பரத்தையொருத்தியின் வீட்டில் இருந்துகொண்டு காமக்களியாட்டத்தில் ஈடுபட்டிருக்கிருன் என்ற செய்தி எப்படியோ ஊரில் பரவுகிறது. அந்தச் செய்தி மெல்ல ஊராரின் மூலம் தலைவிக்கு எட்டுகிறது. அது கேட்ட தலைவி வெட்கமும் வேதனையும் கொண்டு மனம் புழுங்கி வருந்துகிருள். தன் தலைவனின் போக்கு, சான்ருேரால் பழிக்கப்படக் கூடியதாக மிக்க இழிவுடையதாக ஆகிவிட்டதே என்று நினைந்து நினைந்து விம்முகிருள். தன்னந்தனியே இருக்கும் அவளுக்கு ஆறுதல் சொல்லக்கூட யாருமில்லை. நாள் ஏற ஏற தன்னைத் தானே தேற்றிக்கொண்டு, ஊராருக்கும் உலகத்துக்கும் அஞ்சி, தன் துயரத்தையும் துக்கத்தையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், இல்லறத்தை நெறி பிறழாமல், இனிது நடத்திவருகிருள்.

நல்ல ஆடை அணிகலன்கள் அணிந்து கொள்வதிலே விருப்பங்கொள்ளாமல் எளிய வாழ்வைக் கடைப்பிடித்துக் கடமையாற்றி வருகிருள். உள்ளதைக்கொண்டு இல்லறச் செயல்கள் புரிவதிலே கவனம் செலுத்துகிருள். தன் வீடுநோக்கி உற்ருர் உறவினர் வந்தால் அவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று, ஓம்பி அவர்களை வழியனுப்புவாள். தலைவன் எங்கே என்று யாரேனும் கேட்டால், வெளியூருக்குப் போயிருப்பதாகச் சாக்குப் போக்குச்சொல்லி ஒருவாறு தப்பித்துக் கொள்வாள். வேலையாட்களின் உதவிகொண்டு பயிர்த்தொழிலைக் கவனிப்பது, மாடு கன்றுகளைக் காப்பாற்றுவது, மாளிகையைப் பேணுவது போன்ற செயல்களில் ஈடுபடுவாள். அரிசி, பால், தயிர், வெண்ணெய், நெய் போன்ற உணவுப் பொருள்களை ஏழை எளியவர்க்கு வழங்குவதிலே மிக்க விருப்பங் கொள்கிருள், என்ருலும் தலைவனின் போக்கை நினைத்துக் கொள்வாளேயாஞல், வெறுப்பும் அருவருப்பும் அவளது உள்ளத்தில் தோன்றித் தோன்றி மறையும்.

தலைவனிடத்திலுள்ள கைப்பொருளையெல்லாம் கவர்ந்து கொண்டான பிறகு, அவனைப் புறக்கணித்து, வெளியே துரத்தியடிப்பதில் கவனம் செலுத்துகிருள் பரத்தை. தலைவன் சிலநாட்கள் வரையில் சமாளித்துப் பார்க்கிருன். இறுதியில் வேறு வழியின்றி வெறுங் கையோடு வெளியேறும் நிலை ஏற்படும்போது தான் இல்லக் கிழத்தியின் அருமை பெருமைகளைப்பற்றியும் தன் வீடு வாசல்களைப்பற்றியும் நினைவு கொள்கிருன்.

தன் இழிநடத்தையை யறிந்து, தலைவி எப்படியும் வெறுப்பும், அருவருப்பும் கொண்டிருப்பாளே, அவளை எந்த முகத்தை வைத்துக்

கொண்டு பார்ப்பது என்று எண்ணி அச்சமும், வெட்கமும் கொள்கிறான். தலைவியை எப்படிக் காண்பது, எப்படி அவள் எதிரே செல்வது, எப்படி அவளது வெறுப்பையும் சினத்தையும் தாங்கிக் கொள்வது என்று பலவாறாகச் சிந்தித்துச் சிந்தித்து, வழியேதும் காணாமல் கலங்குகிறான். இறுதியில் அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றுகிறது. யாரையேனும் ஒரு அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய விருந்தினரை உடன் அழைத்துச் சென்றால், அப்பொழுது, தலைவி வெறுப்பையோ, சினத்தையோ தன்னிடம் காட்டாள் என்று எண்ணி தனக்குள்ளே முடிவு செய்துகொள்கிறான்.

தலைவன், நெருங்கிய உறவினரும், அன்பிற்கும் மதிப்பிற்குமுரியவரான ஒரு பெரியவரிடம் சென்று "இன்று எங்கள் இல்லத்தில் விருந்துண்ண தாங்கள் வரவேண்டும்" என்று அழைக்கிறான்.

"என்றைக்கும் இல்லாதவாறு இன்று திடீரென்று விருந்துக்கு அழைக்க வந்துள்ளதன் காரணம் என்ன மகனே?" என்று அந்தப் பெரியவர் தலைவனை வினவுகிறார்.

"ஒன்றுமில்லை! நான் மணவாழ்க்கை மேற்கொண்டதற்குப்பிறகு, தாங்கள் என் வீட்டிற்கு வரவேயில்லை. தங்களை அழைத்து விருந்துவைக்கவேண்டும் என்பது என் பேராவல். இன்று நினைத்துக் கொண்டேன். அழைத்துப்போகலாம் என்று வந்தேன்!" என்று தலைவன் கூறுகிறான்.

"அப்படியா? உன் விருப்பத்தைக் கெடுக்கவில்லை. வருகிறேன்!" என்று அந்தப்பெரியவர் இசைவுதருகிறார்.

தலைவன் அந்தப் பெரியவரை அழைத்துக் கொண்டு தன் வீடு நோக்கிச் செல்கிறான். தலைவி எப்படியிருக்கிறாளோ, தன்னைக் கண்டவுடன் என்ன சொல்லுவாளோ என்ற அச்சத்துடன் தலைவன் பெரியவர் பின்னால் ஒளிந்து ஒளிந்து அவரையொட்டிப் பின்னடந்து வருகிறான்.

மாளிகை செம்மையாகவும், தூய்மையாகவும் வைக்கப்பட்டிருக்கும் காட்சியையும், எருமையின் இளங் கன்றுகள் கொட்டிலின் தூண்களில் கட்டப்பட்டிருக்கும் காட்சியையும் கண்டு தலைவன் பெருமிதமும், பூரிப்பும் கொள்கிறான். பெரியவர் முன்னடக்கத், தலைவன் மெல்ல பின்னடந்து வந்து, இருவரும் மாளிகையின் படிக் கட்டில் ஏறுகிறார்கள்.

தம் நெருங்கிய உறவினரும், மதிப்பிற்குரியவருமான பெரியவர் வருவதைக் கண்ட தலைவி ஓடோடியும் வாயிலண்டைவந்து, அவருக்கு வணக்கங்கூறிப், புன் முறுவலுடன் வரவேற்கிறாள். தலைவி முதலில் பெரியவரை மட்டுந்தான் பார்க்கிறாள். பெரியவர் அண்மையில் வரும் போது, அவருக்குப் பின்னால் தலைவன் ஒளிந்து கொண்டு வருவதைப் பார்க்கிறாள். தலைவனைப் பார்த்தவுடன் தலைவிக்குத் தூக்கிவாரிப்போடுகிறது. தன் வெறுப்பையும், திகைப்பையும் வெளியே காட்டிக்கொள்வது அவ்வளவு நல்லதல்ல, உண்மை பெரியவருக்குத் தெரிந்தால் தன் குடும்பத்தைப் பற்றிப் பெரியவர் இழிவாய்க் கருதிக்கொள்வார் என்று நினைத்து, தலைவி தன் உண்மையான உள்ளக்கிடக்கையை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், தலைவனை வழக்கம்போல் புன்முறுவல் காட்டி அழைத்து, பெரியவரைப் பொறுத்து அவன் நடந்து கொள்ளவேண்டியதை இனிய சொற்களால் விளக்கிச் சொல்லிவிட்டு உள்ளே போகிறாள். தலைவனும் ஏதும் நடந்தறியாதவன்போல் காட்டிக் கொண்டு, தலைவி கூறியதைச் செய்வதில் முனைகிறான்.

தலைவி, உள்ளே சென்று நல்ல ஆடை ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டு, காதில் வளைந்த குண்டலத்தையும், கழுத்தில் பொன்னரிமாலைகளையும், விரலில் பொன்மோதிரத்தையும் அணிந்து கொண்டு தன்னை, எவ்வித வேறுபாடும் தெரியாத வண்ணம் ஒப்பனை செய்து கொள்கிறாள்.

பிறகு அவள் கொல்லைப்புரம் சென்று தோட்டத்திலுள்ள வாழைமரத்திலிருந்து வாழையிலையைத் தன் மெல்லியவிரல்கள் சிவக்கும்படி அழுத்திக் கிள்ளி எடுத்துக் கொண்டுவந்துவைக்கிறாள். அந்த வாழையிலையின் அடிமட்டை பருத்திருப்பதால், அதனை நறுக்கி எடுத்துவிட்டு, வாழயிலையால் தொன்னைகள் செய்து வைத்துக்கொண்டு, விருந்துணவு ஆக்க அடுப்பண்டை செல்கிறாள்.

அடிசில் ஆக்கும்போது மேலே எழும் புகை அவளது கண்களில் படிந்து, கண்களை மறைக்கின்றது. நெற்றியில் சிறுசிறு வியர்வைத் துளிகள் அரும்பி வடிகின்றன. தலைவி தன்னுடைய புடவையின் நுனியால் கண்களைத் துடைத்துக்கொண்டும் நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டும் இன்னடிசில் ஆக்குவதிலே கவனம் செலுத்துகிறாள். தலைவன் மீதுகொண்டுள்ள ஊடலால், அவன் முன்னால் அடிக்கடி போகவேண்டாம் என்று கருதி, அடுப்பண்டை நின்று அடிசில் ஆக்குவதிலேயே தன் நேரத்தையும், கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறாள்.

தலைவி பெரியவருக்கு முன்னால் வரும் போதும், விருந்திடும்போதும், தலைவன்மீது சினங்கொண்டு அதன் காரணமாகக் கண்ணைச் சிவப்பாக வைத்துக் கொள்ளாமலும், எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகத்தினளாயும் காட்சியளிக்கிறாள் தலைவி. இது தான் ஏற்ற பொழுது என்று கருதிக்கொண்டு தலைவன் தலைவியோடு நிரம்பப் பேச்சுக் கொடுத்து, ஊடலுக்குச் சிறிதும் இடமில்லாத வாறு பார்த்துக்கொள்கிறான்.

விருந்தினராக வந்திருக்கும் பெரியவர் சிறிது பொழுது தங்கியிருந்துவிட்டுத் தலைவன் தலைவியரது இனிய இல்லற வாழ்க்கையைப் புகழ்ந்து, பாராட்டிச் சொல்லிவிட்டுப் போகிறார்.

விருந்தினர் இருக்கும்போதெல்லாம் இனிய முறையில் பழகத் தலைவனுக்கு வாய்ப்பளித்து, விட்ட தலைவி, அவர்போன பிறகு வேறுவிதமாக நடந்துகொள்ளவோ, தலைவனோடு ஊடல் கொள்ளவோ இயலாமல், அவனோடு கூடி முயங்குவதிலே பெருவிருப்பமுடையவளாக மாறிவிடுகிறாள்.

ஊடல் தீர்க்கும் மாமருந்தாக விளங்கும் விருந்தினர் அடிக்கடி வந்து போனால் எவ்வளவோ நன்றாக இருக்குமே என்று எண்ணி தலைவன் தனக்குள்ளாகவே மகிழ்ந்துகொள்கிறான்!

* * *

இது நற்றிணை-120 ஆம் செய்யுளின் உட்கருத்தைக்கொண்டு எழுதப்பட்ட காதற் காட்சியாகும். இந்தச்செய்யுள் 'விருந்து வாயிலாகப் புகுந்த தலைவன் சொல்லியது' என்னும் பிரிவின்பாற்பட்ட மருதத்திணையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் **மாங்குடிகிழார்** என்னும் புலவராவார். இவரே மாங்குடி மருதனார் என்றும் காஞ்சிப்புலவன் என்றும் அழைக்கப்பட்டார். இவர் தலையலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் அவைக்களத்துப் புலவராய் இருந்தவர். இவர் அவ் அரசனை 'மதுரைக் காஞ்சி' என்னும் பாட்டின் மூலம் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் எல்லாத்திணையைப் பற்றியும் அழகுறப் பாடியுள்ளார். தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்தைச் சார்ந்த மாங்குடி என்ற ஊரே இவரது ஊர் என்று அறியப்படுகிறது. இவரது பாடல்கள் பத்துப்பாட்டு, நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் காணப் படுகின்றன.

தட மருப்பு எருமை மடநடைக் குழவி
தூண்தொறும் யாத்த காண்தகு நல்லில்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை
சிறு தாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண்டு அமர்த்த கண்ணன் தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகில் தலையில் துடையினள் நப்புலந்து
அட்டி லோளே அர்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாள் அன்று
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே

[நற்றிணை - 120]

[பொழிப்புரை: வளைந்த கொம்பினையுடைய எருமையின் இளநடையையுடைய கன்றுகளைத் தூண்கள் தோறும் கட்டியிருக்கின்ற காட்சி மிகுதியால் யாவரும் காணத் தக்க நல்ல மனையின் கண் வளைந்த குண்டலத்தைக் காதிலணிந்த செழுமை பொருந்திய பேதமையுடைய காதலி, சிறிய மோதிரஞ் செறித்த மெல்லிய விரல் சிவக்கும்படியாக வாழையிலையைக் கொய்து வந்து அடிக்காம்பு பருத்திருத்தலின் அதனைப்பிளந்து, பரிகலமமைத்து அடிசிலாக்குதலாலே, புகைபடிந்து அமர்த்த கண்களுடையளாய் அழகுபெறப் பிறை போன்ற நுதலினுண்டாகிய சிறிய நுணுகிய பலவாய வியர்வை நீரை அழகிய முன்றானையி னுனியாலே துடைத்துக் கொண்டு நம்மீது புல்வி மிக்கு அடிசிற்சாலையிடத்தளாய் இருக்கிறாள்; இப்பொழுது விருந்தினராய் வருபவர் எம்முடன் விருமபிவருவாராக; அங்ஙனம் வரின். இந்த அழகிய மாமை நிறத்தையுடைய அரிவை சினங்கொண்டு ஒரு பொழுதுங் கண் சிவப்பதில்லை; அல்லாமலும் புன்சிரிப்புபூத்த முகத்தினளாய் இருப்பாள்; ஆதலின் நமது முயக்கத்துக்கு இன்றியமையாத இவளது சிறிய முள்போன்ற பல் சிறிது தோன்று மாறு நகை கொண்ட முகத்தை யாம் கண்டு நிற்போம்.

தட மருப்பு - வளைந்த கொம்பு; குழை - குண்டலம்.]

ஊடலைப்போக்கத் தலைவன் எவ்விதத் தந்திர முறையைக் கையாளுகிறான் என்பதும் இல்லறத்தின் புகழையும், மேன்மையையும் காப்பாற்ற தலைவி எந்த அளவுக்கு விட்டுக் கொடுக்கும் பெருந்தகையளாய் ஆகிவிடுகிறாள் என்பதும், விருந்தினர், தலைவன் தலைவியர்க்கிடையே மூளும் ஊடலைப் போக்கும் அருமருந்தாய் எப்படி விளங்குகிறார்கள் என்பதும் இச்செய்யுளில் மிக்க நயம்படவும், அழகுபடவும் இனிது சொல்லப்பட்டிருக்கின்றன.

வாழையிலையைக் கொய்துவருதல், அதன் பருத்திருக்கும் அடிக்காம்பைப் பிளந்து, வாழையிலையால் தொன்னைகள் செய்தல், அடும்போது கண்களிலே புகைபடிதல், நெற்றியில் ஏற்படும் சிறு வியர்வைத் துளிகளைப் புடவையின் முன்றானையால் துடைப்பது போன்ற பழக்கங்களை அழகுபடக் கூறுவது நயப்பாடு நிறைந்ததாக இருக்கின்றது.

வெளிவந்துவிட்டது!

ஆசிரியர்:
இரா. செழியன், எம். ஏ.,

மூன்று சிறு நாடகங்களின் தொகுப்பு

"போராட்டம்"

விலை ரூ. 2-4-0

கிடைக்குமிடம்;

பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை-1.

வினாவும் விளக்கமும்

வினா: "திராவிட முன்னேற்றக் கழகத்தார் வெள்ளைக்கார ஏகாதிபத்ய தாசர்கள் ஆவார்கள். ஏனெனில் திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் முன்னோர்களான நீதிக்கட்சியினர், வெள்ளைக்காரர்களுக்கு இந்த நாட்டைக் காட்டிக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அவர்களின் ஏகாதிபத்யத்திற்குத் தாசர்களாகவும் வாழ்ந்து வந்தனர்" என்னும் கருத்துப்படத் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசிவருகிறாரே அதுபற்றிய கருத்து என்ன?

விளக்கம்: தமிழக (சென்னை) மாநில அமைச்சரவையைச் சேர்ந்த 'மும்மூர்த்திகளா'ன தோழர்கள் காமராசர், சி. சுப்பிரமணியம், எம். பக்தவத்சலம் ஆகியோர் பொதுத்தேர்தல் நெருங்க நெருங்க தி. மு. கழகத்தைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் புனைந்து, அதனை இழித்தும் பழித்தும் கூறுவதிலே மிக மும்முரமாக இறங்கியுள்ளனர். தி. மு. கழகம் அடுத்து வரும் பொதுத்தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவு செய்திருப்பதானது, அவர்களுக்கு உள்ளபடியே அச்சத்தையும், கலக்கத்தையும் பெருமளவுக்குத் தந்திருக்கிறது.

தி. மு. கழகம் போட்டியிட்டால் போட்டி மிக வலுவாக இருக்குமே, காங்கிரசு அவ்வளவு எளிதில் வெல்லுவதாக நிலைமை ஏற்படாதே, காங்கிரசை வாட்டி வளவெடுத்து விடுவார்களே, காங்கிரசின் ஆதிக்கக் கோட்டை சிறிது சிறிதாகச் சரிய வழி ஏற்படுமே, தி. மு. கழகத்தார் ஒரு சிலர் சட்டமன்றம் வந்தாலும் ஆளும் கட்சியினரின் குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டி அவர்களை ஆட்டிப் படைத்து, அவர்கள் கண்களில் விரலைவிட்டு ஆட்டுவார்களே என்றெல்லாம் எண்ணி அவர்கள் மதிமயங்கிக் கலங்குகிறார்கள் போலும் என்று கருதவேண்டியிருக்கிறது. அந்தவகையில் அவர்களின் ஏச்சுக்களும், பேச்சுக்களும் அமைந்திருக்கின்றன.

கழகத்திடத்து மாசு இல்லாவிட்டாலும், அதன் மீது மாசு கற்பித்து அதன் பெயரையும் செல்வாக்கையும் குறைக்கவேண்டும் என்று இட்லரையும் மிஞ்சும் வகையில் தமிழக அமைச்சர்கள் பேசித் திரிந்து வருகின்றனர். அமைச்சர் சுப்பிரமணியத்தின் அப்படிப்பட்ட கூற்றுக்களிலே ஒன்றுதான், வினாவில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாகும்

தோழர் சி. சுப்பிரமணியம் அவர்களின் கூற்றினைக் காணும்போது, நமக்கு 'ஓநாய்-ஆட்டுக்குட்டிக்' கதைதான் நினைவுக்குவருகிறது. ஒரு அருவியில் நீர் அருந்த ஓநாய் ஒன்று சென்றதாம். அதேபோது ஆட்டுக்குட்டி ஒன்றும் நீர்குடிக்க அந்த அருவிப்பக்கம் வந்து சேர்ந்ததாம். ஓநாய் அருவியின் மேல்பக்கம் நின்று நீர் குடித்ததாம். ஆட்டுக்குட்டி அருவியின் கீழ்ப்பக்கம் இருந்து நீர் அருந்திற்றாம். ஆட்டுக்குட்டியை எப்படியாவது வம்புக்கு இழுத்து, அதனைக் கொன்று தனக்கு உணவாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்று ஓநாய் எண்ணிக்கொண்டதாம். பிறகு ஓநாய் ஆட்டுக்குட்டியைப் பார்த்து "நான் குடிக்கிற தண்ணீரை, நீ ஏன் எச்சிலாக்குகிறாய்?" என்று உறுமிக் கேட்டதாம். உடனே ஆட்டுக்குட்டி நடுநடுங்கிப்போய் "ஐயோ! நான் ஒரு பாவமும் அறியேன்! உமக்கு வரும் தண்ணீரை நான் எச்சில் படுத்துவதில்லையே! நீர் எச்சிலாக்கி அனுப்புகிற தண்ணீர் அல்லவா என்பக்கம் ஓடிவருகிறது! நானல்லவா உம்முடைய எச்சில் தண்ணீரைப் பருகவேண்டியிருக்கிறது?" என்று வினயத்துடன் கூறிற்றாம். தன்னுடைய கேள்விக்கு ஆட்டுக்குட்டி ஆணித்தரமான பதில் அளித்து விட்டதோடு தன்னையும் ஒரு அடிமுட்டாள் என்று நிலைநாட்டி விட்டதே என்று எண்ணி ஓநாய் மிக்க சினங்கொண்டது. ஆட்டுக்குட்டியை எப்படியேனும் மடக்கிவிட வேண்டும் என்று கருதிக்கொண்டு "நீ தவறு செய்யாவிட்டாலும், உன்னுடைய பாட்டன் இந்தத் தவற்றைச் செய்திருக்கலாம் அல்லவா?" என்று உறுமிக் கேட்டுக்கொண்டே ஆட்டுக்குட்டிமேல் பாயக் காத்திருந்ததாம். "என்னுடைய பாட்டன் காலத்தில் நீரும் பிறந்திருக்க மாட்டீர்; எனது பாட்டனும் இந்தக் காட்டுப்பக்கம் வாழ்ந்ததாக யாரும் சொல்லவில்லையே!" என்று

ஆட்டுக்குட்டி கூறிக்கொண்டிருக்கும் போதே, ஓநாய் ஆட்டுக்குட்டியின்மீது தாவிற்றும்.

ஓநாய்க்குப் பதிலாகத் தோழர் சி. சுப்பிரமணியத்தையும், ஆட்டுக்குட்டிக்குப் பதிலாகத் தி. மு. கழகத்தாரையும், ஆட்டுக்குட்டியின் பாட்டனுக்குப் பதிலாக நீதிக் கட்சியினரையும் பொருத்திவைத்துப் பார்த்தால், உவமையின் பண்புகள் அப்படியே பொருந்தி வருவதைக் காணலாம்.

காங்கிரசு முழுக்க முழுக்க செய்திருக்கும் தவற்றைக் கழகத்தின் மீது கற்பித்து, அது முடியாமற் போகவே, நீதிக்கட்சியின் மீது வீசி அதன் மூலம் கழகத்தை அழித்து ஒழித்து விடலாம் என்று ஆட்டுக்குட்டியை ஒழிக்க நினைத்த ஓநாயைப் போல தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் உறுமுகிறார்கள். ஆனால் முடிவு இப்பொழுதுள்ள கதையின் முடிவைப் போல அமையாது என்பதையும், ஆட்டுக்குட்டி மெல்ல மெல்ல வளர, ஓநாய் மெல்ல மெல்ல தளர, ஓநாயை ஆடு குத்திக் கீழே தள்ளிற்று என்றுதான் அமையும் என்பதையும் காங்கிரசு அமைச்சர்கள் உணருவார்களாக!

வெள்ளைக்காரனுக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பது என்பது, சென்ற மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்த சுதேசமன்னர்களாலும், ஒமிச்சந்து போன்ற தரகர்களாலும், பட்டக்காரர்கள்-பாளையக் காரர்கள் - சமீன்தாரர்கள் போன்றவர்களாலும் செய்து முடிக்கப்பட்ட செய்கையாகும். இருபதாவது நூற்றாண்டில், நீதிக்கட்சி தோன்றி வளர்ந்த காலத்தில் அதற்கு அறவே வாய்ப்பு கிடையாது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். சுதந்திரமாக இருந்த ஒரு நாட்டை வெள்ளைக்காரர்களுக்கு அடிமையாக்கி விட நீதிக்கட்சியினர் பாடுபட்டது போல எண்ணிக்கொண்டு "நாட்டைக் காட்டிக் கொடுத்தார்கள் நீதிக்கட்சியினர்" என்று உளறிக்கொட்டிக் கொண்டு வருகின்றனர் காங்கிரசு அமைச்சரும், அவரன்ன பிறரும். இதற்கு அவர்களின் அறியாமையைக் காரணம் காட்டுவதா? அல்லது வேண்டுமென்றே பொய் புகன்றிடும் அழுக்காறு கொண்ட ஆணவத்தைக் காரணம் காட்டுவதா? இரண்டையுமேகூட காரணமாகக் காட்டலாம்!

முழுக்க முழுக்க இந்தியாவை அடிமை நிலையில் வைத்திருந்த வெள்ளைக்காரன், இரட்டையாட்சி என்ற முறையில் சிறிதளவு உரிமை வழங்க முன் வந்தான். அந்த உரிமையைப் பெற்று நடைமுறைப் படுத்துவதிலே நீதிக் கட்சியினர் இறங்கினர். இப்படியாகச் சிறிது சிறிதாக உரிமைகளைப் பெற்று நாளடைவில், இந்தியாவைச் சுதந்திர நாடாக ஆக்கிக்கொள்ளலாம் என்று தான் நீதிக்கட்சியினர் எண்ணினரே ஒழிய, "இரட்டையாட்சி உரிமையே என்றென்றும் போதும்; வேறு உரிமையே அவசியம் இல்லை" என்று கூறிவிட்டு அந்த அளவோடு அடங்கிவிடவில்லை. நீதிக்கட்சியினர் இரட்டை ஆட்சிமுறையில் அமைச்சர் அவையை நிறுவினர் என்ற ஒரே காரணத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் வெள்ளைக்கார தாசர்களாக இருந்தனர் என்று காங்கிரசார் அவர்களைக் குற்றஞ் சாட்டுகின்றனர். வெள்ளைக்காரன் முதலில்கொடுத்த இரட்டையாட்சி உரிமையைத்தான் காங்கிரசார் ஏற்றுக் கொள்ளவில்லையே ஒழிய, 1935 இல் கொடுத்த சிறிதளவு அதிகப்படியான உரிமையையும், 1946 இல் கொடுத்த அதைவிட சிறிதளவு அதிகப்படியான உரிமையையும், 1947 இல் கொடுத்த அதைவிட அதிகப்படியான முழு உரிமையையும் படிப்படியாகப் பெற்றுக் கொள்ளத்தான் செய்தார்கள். இப்படி வழங்கப்பட்ட உரிமைகள் எவையும் தேவையில்லை, இரட்டை ஆட்சி உரிமை ஒன்று மட்டுமே போதும் என்று நீதிக்கட்சியினரோ அதிலிருந்து தோன்றிய கழகங்களோ கூறவில்லையே! பிறகு வந்த உரிமைகளைப் படிப்படியாக ஏற்றுக் கொண்ட காங்கிரசு போற்றப்படும்போது, முதலில் வந்த உரிமையை ஏற்றுக்கொண்ட நீதிக்கட்சி மட்டும் தூற்றப்படுவானேன்?

நீதிக்கட்சியினர் வெள்ளைக்கார ஏகாதிபத்ய சர்க்காருக்கு இராசவிசுவாசப் பிரமாணம் செய்துவிட்டு அமைச்சர் அவை ஏறினார்கள் என்ற காரணத்துக்காகத்தான் அவர்கள் வெள்ளைக்கார தாசர்கள் என்று தூற்றப் படுகிறார்கள் என்றால் நேருவும் ஆச்சாரியாரும் கூட அந்த அளவுக்குத் தூற்றப் படவேண்டியவர்கள்தாம். எந்த இராசவிசுவாசப் பிரமாணத்தை எழுந்து, கால்புள்ளி, அரைப் புள்ளி, முழுப்புள்ளி, விடாமல் படித்துவிட்டு நீதிக்கட்சியினர் பதவி ஏறினார்களோ, அதே இராசவிசுவாசப் பிரமாணத்தை அதே விதமாகப் படித்து விட்டுத்தான் 1937 இல் ஆச்சாரியார் சென்னை முதலமைச்சர் பதவி ஏற்றார்; 1946 இல் பண்டிதநேரு, பட்டேல், பிரசாத் ஆசாத், ஆச்சாரியார், லியாகத் அலி கான், பிரோஸ்கான் நூன் ஆகியோர் மத்திய அமைச்சரவைப் பதவி ஏற்றார்கள். இராசவிசுவாசப் பிரமாணம் செய்ததற்காக நீதிக்கட்சியினர் வெள்ளைக்கார தாசர்கள் என்றால்; பண்டிதாரும், படேலும் ஆச்சாரியாரும் பதவி ஏற்ற பிற காங்கிரசுக்காரர்

களும் வெள்ளைக்கார தாசர்கள் என்றுதானே அழைக்கப்படவேண்டும். 'மகள் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன் குடமா?' எனவே இந்த வகையில் நீதிக்கட்சியினரை வெள்ளைக்கார தாசர்கள் என்று அழைப்பது பொருந்தாது என்பதை உணரவேண்டும்.

காங்கிரசு வகுத்துக்கொண்ட திட்டங்களைப், பிற கட்சிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், அக்கட்சிகள் வெள்ளைக்கார தாசர்கட்சிகளாகத்தான் இருக்கவேண்டும் என்று அவசியமில்லை. அவை வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை அழிக்க வேறுவகைத் திட்டங்களைக் கொண்டவைகளாக இருக்கமுடியுமே. காங்கிரசோடு இணையவில்லை என்ற காரணத்துக்காக நீதிக்கட்சியையும் அதை ஒட்டிப்பிறந்து வளர்ந்தகழகங்களையும் வெள்ளைக்கார தாசர்கட்சிகள் என்று தூற்றுவது உண்மைக்கும், அறிவுக்கும் எவ்வகையிலும் பொருந்தி வராததாகும்.

வெள்ளை ஏகாதிபத்யம் இந்தியாவுக்கு எவ்வித உரிமையும் வழங்கவேண்டியதில்லை என்றோ, வெள்ளை ஏகாதிபத்தியம் என்றென்றும் இந்தியாவை ஆண்டு வரவேண்டுமென்றோ நீதிக்கட்சி என்றும், எங்கும் முடிவு செய்ததில்லை. நீதிக்கட்சியின் நோக்கமும் முழுச் சுதந்திரம் பெறுவதுதான் என்பது அதன்கொள்கை விளக்கத்திலே முன்பே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுது இந்திய வடநாட்டு ஏகாதிபத்ய சர்க்கார் சிலரின் 'திறம்' அறிந்து எப்படிப் பட்டங்களை வழங்குகிறார்களோ, அப்படியே வெள்ளைக்கார சர்க்காரும் சிலருக்குப் பட்டங்கள் வழங்கினர். பட்டம் பெறுவது சுதந்திரம் வேண்டாம் என்பதைக் காட்டும் அறிகுறியாகாது என்று கருதித்தான் நீதிக்கட்சித் தலைவர்கள் பட்டங்களை வேண்டாம் என்று சொல்லுவதிலே அவ்வளவு கவலைகொள்ளவில்லை. வெள்ளை ஏகாதிபத்ய சர்க்காருக்கு நமது வெறுப்பைக் காட்டிக்கொள்வதுதான் ஏற்றது என்ற முடிவை 1944 இல் சேலத்தில் நடைபெற்ற திராவிடக் கழக மாநில மாநாடு மேற்கொண்டபோது, வெள்ளைக்கார ஆட்சிதந்த பட்டம் பதவியாளர்களைக் கட்சியை விட்டு வெளியேற்றும் பணி நடைபெற்றது. வெள்ளையர் வெளியேறிய நாளான 1947 ஆகஸ்டு 15 ஆம்நாள் கொண்டாடுவதற்குரிய மகிழ்ச்சி கொள்நாள் என்று தான் அறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள். அப்படிப்பட்டவரை வழிகாட்டியாகக் கொண்டுதான் தி. மு. கழகம் இயங்கிவருகிறது. இதனை வெள்ளைக்கார தாசர்கட்சி என்று எப்படிச் சொல்ல இயலும்?

வெள்ளைக்காரன் சட்டத்தை நீதிக்கட்சியினர் மதித்தார்களே, அது தாசர் புத்தி அல்லவா என்று காங்கிரசுக்காரர்கள் கேட்கிறார்கள். வெள்ளைக்கார ஆட்சியின்போது காங்கிரசுக்காரர்கள் எல்லோரும் எப்போதும் அரசாங்கத்தின் சட்டத்தையும், ஒழுங்கையும் உடைத்துக்கொண்டே இருக்கவில்லையே! சட்டமறுப்புக் காலத்தின் போதும், உப்பு சத்தியாக்கிரகத்தின் போதும், 1942 ஆகஸ்டுக் கிளர்ச்சியின் போதும் ஒரு சில சட்டங்களைத்தான் அவர்களால் எதிர்க்க முடிந்ததே தவிர, அவைகளை உடைக்கக்கூட முடியவில்லை. பிற நேரங்களில் சட்டங்கள் அனைத்திற்கும் அடங்கி ஒடுங்கித்தானே நடந்து வந்தார்கள்? வெள்ளைக்காரனுடைய சட்டத்தையும், ஒழுங்கையும் காங்கிரசுக்காரர்களும் மதித்துத்தான் நடந்துவந்தார்களே ஒழிய, ஒரேயடியாக எல்லாவற்றையும் எப்பொழுதும் எதிர்த்து விடவில்லை. காங்கிரசுக்காரர்கள் பெரும் பொழுது எப்படி வெள்ளைக்காரர் சட்டத்திற்கும், நீதிக்கும் கட்டுப்பட்டு, அவற்றை மதித்து நடந்து வந்தார்களோ, அப்படித்தான் நீதிக்கட்சியினரும் செய்து வந்தனர். நீதிக் கட்சியினர் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் இந்தியாவிற்கு சுதந்திரம் தேவையில்லை என்று சொல்லவில்லையே!

உள்ளபடியே வெள்ளைக்காரனை வழிகாட்டியாகக் கொண்டிருந்ததும், அவனோடு நெருங்கிய தொடர்பும், நட்பும், உறவும் கொண்டிருந்ததும் காங்கிரசே தவிர, கழகம் அல்ல என்பதை அமைச்சருக்கு உணர்த்த விரும்புகிறோம். 1885 இல் காங்கிரசு தோன்றுவதற்கே காரணமாக இருந்தவர்கள் ஹியூம், வெட்டர் பெர்ன் போன்ற வெள்ளைக்கார துரைமார்கள் தாம். அவர்கள் வைத்த 'காங்கிரசு' என்ற ஆங்கிலப் பெயர் இன்னமும் அப்படியேதான் இருந்து வருகிறது. ஏறத்தாழ 1920 ஆம் ஆண்டு வரையில் வெள்ளைக்கார சக்ரவர்த்திக்கு இராசவிசுவாசப் பிரமாணம் செய்துவிட்டுத்தான் காங்கிரசுமாநாடு ஆண்டுதோறும் கூடியிருக்கிறது. காங்கிரசுதான் வெள்ளைக்காரனுக்கு மிக்க கடமைப்பட்டிருக்கிறது, அவன் கருவியாக இருந்திருக்கிறது, அவனுக்கு விசுவாசமாக நடந்துவந்திருக்கிறது. எனவே அமைச்சர் கழகத்தைப் பற்றிக் கூறுவதெல்லாம் வீண்பழி என்று நடுநிலையாளர்கள் அனைவரும் உணர்வர் என்பதில் ஐயமில்லை.

★ புதிய மூக்கு வேண்டுமா? ★

உங்களுடைய மூக்கின் வடிவமோ அல்லது அளவோ முகத்தின் அழகைக் கெடுக்கின்றனவா? அப்படியானால் அதற்காக நீங்கள் கவலை கொள்ளவேண்டிய தேவையில்லை! உங்களுக்குப் புதிய மூக்கு வழங்க அறிவியல் (விஞ்ஞானம்) முன்வந்துவிட்டது!

பாரிசு நகரத்தில் நாள்தோறும் பத்துப் பெண்களுக்குக் குறையாமல் தங்களுடைய மூக்குகளைப் புதியனவாகவும், பொலிவுடையனவாகவும் உருவாக்கிக்கொண்டு போகிறார்கள். அவர்களின் மூலம் மட்டும் டாக்டருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 1000 கிடைக்கிறது.

திரைப்படப் பெண்களோ அல்லது நவநாகரிகப் பெண்கள் மட்டுந்தான் மூக்கு அழகு படுத்திக்கொண்டு செல்லுகிறார்கள் என்று எண்ணவேண்டாம். தங்களுடைய மூக்கின் அமைப்புப்பற்றி அருவருப்புக் கொள்ளும் சாதாரணப் பெண்களே கூட, எவ்வளவு செலவு ஆனாலும் அழகு படுத்திக் கொள்வதில் அக்கறை காட்டுகிறார்கள்.

மொத்தமாகக் கணக்கிட்டுப் பார்த்தால் பத்துப் பெணகளுக்கு ஒரு ஆண் வீதம், ஆடவரும் தம் மூக்கைப் பொலிவுடையனவாகத் திருத்திக் கொள்ள விரும்புகிறார்கள். ஆடவர்களில் பாதிப்பேர் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

முகத்தின மொத்த அழகை, மூக்கு பெரும் அளவுக்கு நிலைநாட்டுகிறது என்று கூறுவர். அழகான மூக்கு என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று பல நாடுகளிலும் இலக்கணம் வகுத்து வைத்திருக்கிறார்கள். 1819-இல் டி. கூக் (T. Cooke) என்பவர் தாம் எழுதியுள்ள நூல் ஒன்றில் அழகான மூக்கிற்கான இலக்கணத்தைக் கூறியுள்ளார்.

“முற்றும் முடிந்த அழகான மூக்கு நெற்றியின் நீளத்தில் நாலில் ஒரு பகுதி அகலமுள்ளதாகவும், முகத்தின் நீளத்தில் மூன்றில் ஒரு பகுதி நீளமுள்ளதாகவும் இருக்க வேண்டும். மூக்குத்துளையின் அகலம் கண்ணின் அகலத்தைக் கொண்டிருக்கவேண்டும். மூக்கின் நுனியிலிருந்து மூக்கின் அடிவரையிலுள்ள நீளம், நெற்றியில் இருபுருவங்களுக்கிடையேயுள்ள பள்ளத்தின் நீளமிருக்கவேண்டும்.”

என்பது அவர் கூறிவைத்துள்ள இலக்கணம். நீங்களும் உங்கள் மூக்கை அளந்து பாருங்கள்! அழகு-அமைப்பு எப்படி என்று பார்த்துக் கொள்ளுங்கள்!

லியனார்டோ-ட-வின்சி என்ற சிறந்த உலக ஓவியக் கலைஞர், எட்டுவகையான மூக்குகளைப். பற்றி வரையறுத்துக் கூறிப் பாகு படுத்தி வைத்துள்ளார்.

வரலாற்றில் கூறப்படும் குறிப்பிடத்தகுந்த மூக்குகளில், பிரெஞ்சுப்போர் வீரரும், நாடகாசிரியருமான சிரானோ - டி-பெர்செராக்கின் மூக்கு அறியத்தகுந்த ஒன்றாகும். அவருடைய மூக்கு இதுவரையில் உலகில் யாரிடமும் காணமுடியாதபடி அவ்வளவு பெரிய அளவுள்ளதாகவும், அவ்வளவு அழகற்றதும் ஆகும். அந்த மூக்கைப்பற்றி வேறொருவர் குறிப்பிடும்போது “இமயமலைக்கு அடுத்தபடி பெரிய மலையாக விளங்குவது சிரானோவின மூக்குத்தான்” என்று கேலியாகச் சொல்லியுள்ளார். தமக்கு அவ்வளவு பெரிய மூக்கு இருப்பது தமக்கே அமைந்த ஒரு சிறப்பு என்று கருதி அவர் மிகவும் பெருமிதப்பட்டார். அவர் அந்த மூக்கை வைத்துக் கொண்டு ஆயிரம் பேரோடு குத்துச்சண்டை போட்டிருக்கிறார். குத்துச் சண்டையில் 12 பேரைக் கொன்று வீழ்த்தியுமிருக்கிறார்.

இப்பொழுது இருப்பவர்களிலே யாருடைய மூக்கு பெரிய மூக்கு? ஜிம்மிடொரான்டே. (JimmyDorante) என்பவரது மூக்குதான் மிகப் பெரியது. அவருடைய மூக்கின் தனித்தன்மையே அவருக்கு எல்லாக்காலத்திலும் பெயரையும், புகழையும் நிலைநாட்டுகிறது. அவருடைய மூக்கின் நீளம் எட்டு அங்குலம் என்று சொல்லப்படுகிறது. அவர் தம்முடைய மூக்கை மிகப் புகழ் வாய்ந்த ஒன்றாகக் கருதி ஆறு இலட்ச ரூபாய்க்கு இன்ஷியூர் செய்திருக்கிறார்.

டிகோ பிராகே என்னும் டச்சு நாட்டு வானநூல் வல்லுநர், கத்திச் சண்டை ஒன்றில் தம்மூக்கின் நுனியை இழந்தார். அதனால் ஏற்பட்ட மூளியைப் போக்க, தங்கத்தால் ஒரு நுனி செய்து அதனை மூக்கோடு சேர்த்து ஒட்டவைத்துக் கொண்டார்.

உடலின் வேறோர் பகுதியிலுள்ள சதையை எடுத்து மூக்கிலே ஒட்டவைத்து மூக்கை அழுகு படுத்தும் அறுவை மருத்துவம் இந்தியாவில் குறிப்பாகத் தென்னாட்டில் 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நிலவி வந்த முறையாகும். பதினைந்தாவது நூற்றாண்டில் இத்தாலியமருத்துவர் தென்னாட்டின் இந்த முறையைக் கையாண்டு வெற்றிபெற்றார் என்று சொல்லப்படுகிறது. மூக்கின் அழகையும், அளவையும், வடிவையும் சரிப்படுத்தும் மருத்துவ முறை, சென்னையிலுள்ள பெரிய மருத்துவச்சாலைகளில் இப்பொழுது வெற்றிகரமாகக் கையாளப்படுகின்றன.

(18-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணி: எனக்கா!

மதி: வியப்பாயிருக்கிறதா?

மணி: வியப்புமட்டுமல்ல வேடிக்கையாகவுமிருக்கிறது.

மதி: நமக்கே நம்பிக்கையில்லையென்று சொல்கிருனே' என்று. விளக்கமாகச் சொல்கிறேன். உனக்கு நம்பிக்கையிருந்தால் இப்படிப்பட்ட சிறு செய்திகளுக்கெல்லாம் சிந்தனையை அடிமைப்படுத்தியிருக்கமாட்டாய். உன்கொள்கையும் கருத்தும் இவைபோன்ற தடைகளில் அசைவுற்று ஓய்ந்துவிடுவதென்று எண்ணுகிருய். அவ்வளவு எளிதானதும் இலேசானதுமல்ல மணி! நீ கைக்கொண்டுள்ளவை. இப்போது உன்னை மறுத்தவள் உன்காதலி! உன் கோபத்தையோ மறுப்பையோ அளவுக்கு மீறி எதிர்ப்பவளல்ல அவள். இவள்போன்றவரல்லர் நீ எதிர்த்து நிற்கப்படவேண்டியவர்கள். இப்போது நீ கோபித்துக்கொண்டும் மறக்க வேண்டுமென்ற முடிவோடு வந்துவிட்டாயே இதேபோன்று கோபித்துக்கொண்டு மறந்துவிடக் கூடியவர்களல்ல அவர்கள். அதனுல்தான் உன்னை முதலிலேயே எச்சரித்தேன் ஆத்திரபடக்கூடாது என்று. உன் கொள்கைகள் உன் உள்ளத்தைக்கவர்கின்ற அளவு எல்லோருடைய உள்ளத்தையும் தொடும்படி அவர்கள் ஆடினுல் ஆடி - நடந்தால் நடந்து - வளைந்தால் வளைந்துசென்ருல்தான் உன் திட்டம் வகுத்தபடி நிறைவேற்றப்படும். இல்லையேல் தொடக்கத்திலேயே சிதைந்து சீரழிந்துவிடும். கொள்கைகளையும் கருத்துவளத்தையும் கண்டபோது அதை அப்படியே நிலைபெறச் செய்துவிடவேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் ஏற்படுதல் இயல்புதான். ஒருவயலிலில் விதைத்து வளர்ந்துள்ள பயிருக்குப் பதிலாக-நாம் விரும்பும் வேறு பயிரை விதைத்து விளைக்க எண்ணிஞல் உடனே அதன் மேலேயே விதைத்துவிட முடியுமா? விளைந்ததை அறுத்து-மீண்டும் உழுது பதப்படுத்தி உரமிட்டு அதன்பிறகல்லவா விதைக்கவேண்டும். ஆனுல் கருத்துக்கும்-பயிருக்கும் உள்ள வேறுபாடுதான் இங்குமாற்றம். அதுகளிமண்-இங்கு மனிதஇனம், அதுபோட்டதை ஏற்கும் இவன் கேட்டதை ஆய்ந்து வளர்ப்பான். எனவே மெள்ளமெள்ளத்தான் கருத்து வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

மணி: எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்.

மதி: வளர்க்க எத்தனை ஆண்டுகள் பிடித்திருக்கிறது. வளர்ந்து எத்தனை ஆண்டுகள் நிலைத்திருக்கிறது.

மணி: அதை உணர்ந்து கொண்ட நாம் உடனடியாக அதைப் போக்க வகை செய்ய வேண்டாமா? காலந் தாழ்த்தலாமா?

மதி: எப்படிமுடியும்! இப்போதுபார் உன் காதலி உன் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இவளை நீ மணம் செய்துகொள்ளவில்லை யாதலால் மறுத்து விட்டு ஓடிவந்துவிட்டாய், இவளுன்மனைவியாயிருந்தால்? இதுபோலவே, சூழல்களில் தாய்-தந்தை - அண்ணன் முதலிய குடும்பத்தலைவர்கள்; அல்லது பணிமனை முதல்வர் போன்ற அலுவற்றுறைத் தலைவர்கள் என்ற இன்னபல இன்னல்களை எப்படி எடுத்தெறிவாய். அவர்கள் உன்போன்றவனை நோக்கிக்கேட்பதெல்லாம் "முன்னோர்கள் அறிவிலிகளா? அவர்களின் அமைப்பை அகற்ற முனைவது நல்லதா?" என்று கேட்பார்கள். நீ அதற்கு விளக்கம் கூறினுல் "பழமைக்கு விரோதி" என்ற பட்டம சூட்டிப்பார்ப்பவர்க்கெல்லாம் குரோத மனப்பான்மை உண்டாகும்வகை செய்வார்கள்.

மணி: ஆக இதை என்னதான் செய்ய வேண்டுமென்கிருய்.

மதி: இத்தகைய சலிப்பு ஏற்படுதல் கூடாது. ஊரார் தூற்றுவர், உற்ருர் பகையாவர், கண்டார் காரிஉமிழ்வர். இன்னும் கல்லாலும் சொல்லாலும் அடித்துச் சோர்வுறச் செய்வர். அவர்களெல்லாம் ஏன் அவ்வாறு செய்கிருர்கள் என்பதைச் சிந்திக்கவேண்டும். அவர்களின் கொள்கைகள் தவறென எடுத்துக் காட்டுவதைக் கண்டுதான் அவ்வாறு செய்கிருர்கள். சிருர்கள் தங்களுடன் நட்பு பகை என்று கொள்ளும் போது-அழிம்பு காட்டியும்-அடித்தும் திட்டியும். செயல் வழிப்படுகின்ருர்களல்லவா-அதுபோல இது முதுமையில் இளமை. ஆனுல் அவர்களைத் தனித்தனியாக அழைத்து விளக்கம் கேட்டுப்பார். வேற்றுமை உணர்வை மாற்ற எண்ணிப்பார், திரும்பத் திரும்பச் செக்கைச் சுற்றுவது போலத்தான் "ஆண்டவன் உண்டா இல்லையா" என்ற இடத்திற்குத்தான் வந்து சேர்வார்கள்.

மணி: காரணம்?

மதி: அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆதாரமும் ஆயுதமும் அது தான். உண்

டென்று ஒப்புக்கொண்டு நம் வழிக்குக் கொண்டு வருவோமென்றால் "முன்னுக்குப் பின் முரண்படுகிறான்" என்ற முரட்டு முடிவுக்கு வருவார்கள். இல்லையென்று மறுத்தே நம் கருத்தைத் துவக்கினால் அதையே காரணமாகக் காட்டி "மதவிரோதி" எனக் கூறி நம்மைத் தாக்குவர். அம்மாதிரியான நேரங்களிலெல்லாம் பொறுமையல்லவா உன் கருவியாக இருக்கவேண்டும்.

மணி: இப்படியெல்லாம் படிப்படியாக முயற்சி செய்வதை விட இன்னாரின்னார் இப்படி இப்படித்தான் நடக்கவேண்டுமென்ற திட்டத்தைக் கட்டாயப்படுத்தினால்.

மதி: மறுப்பும் எதிர்ப்பும் அதனால் அமைதிக்குறைவும் அழிவுந்தான் நேருமே தவிர எண்ணங்களோ கருத்தோ நிறை வேறாது. தைத்தவாய் வழியே முள்ளெடுப்பது எளிது. அதை விட்டு வேறுமுறைக் கையாண்டால் வேதனை இரட்டிப்பாகும். போ! இப்போது நீ ஆவேசத்துடன் வந்திருக்கிறாய சற்றே அமைதி பெற்றுப் பின்னர் சிந்தித்துப்பார். சிக்கல்களின் விளக்கம் நன்கு புலனாகும். அதன் பிறகு சென்று உன் அன்புக்கிளியாளைக் கண்டு ஆறுதல் கூறிவா! இனி ஒரு முறை அவ்வாறு நடந்துகொள்ளாதே! நன்றாக எண்ணிப்பார், உன்னுடைய குறைகளையும் உள்ளக் கிடக்கையையும் வேறுயாரிடமாவது கூறி ஆறுதல்பெறலாம். பெண்கள் நிலை அவ்வாறன்று. மற்றோரிடம் கூறவும் முடியாது அல்லது உன்னைப் போல்புறக் காட்சிகளைக் கண்டு அமைதி தேடவும் இயலாது. எனவே பெரும் பான்மையும் கடிதல் கண்டித்தல்களைக் குறைந்துவிடு.

மணி: அப்படியே செய்கிறேன். நீ எங்கே செல்கிறாய்? வீட்டிற்கு வரவில்லை!

மதி: போவருகிறேன். வேறெங்கே போக்கிடம். ஒரு வேளை நான் காணவிரும்பும் நாட்டமைதி ஏற்பட்டால் புகலிடம் கிடைக்கப் பெறுமோ என்னவோ!

மணி: மிகவும் விசித்திரமானவனப்பா நீ! எப்படித்தான் காலங்கழிக்கிறாயோ!

மதி: விசித்திரமென்ன இதிலே! இல்லாமை என்னை ஆட்சி செய்கிறது. உழைப்பைத் தந்தாலும் ஊதியத்தைத் தருவாரில்லை! காசிருந்தால் கண்ணியமாக வாழலாமென்று கருதுகிறேன். என் செய்வேன். சோறு கண்ட இடம் சொந்த மாளிகை, படுக்கக்கிடைத்த இடம் பளிங்கறைப்பள்ளிமாடமெனக் கொள்கிறேன். வேறென்ன? எனக்குத்தான் ஆசையிருக்கிறது வாழலாம் வாழவேண்டுமென்று. வகையிருந்தால்தானே!

மணி: போதுமப்பா! போதும் கேட்டாலே உள்ளம் பதறுகிறது. வருகிறேன்.

மதி: சென்றுவா! (போனபின்) ஆர்வமிருக்கிறது அளவற்று. ஆத்திரம் மேலிடுகிறது முதன்மைபெற்று. உம... செல்லச் செல்லத் திருந்துவகை நோராதாபார்க்கலாம். நானென்னவோ அவனுக்கு ஆறுதல் கூறி அனுப்பி விட்டேன். என்வகை? எத்தனை முறை எத்த னித்தாலும் அத்தனையும் என்னை அயர்வுப்படுத்துகிறதே! என்செய்வேன். ஏழைக்குக் காதல் இயல்பில்லை என்ற நிலையேற்க இதயம் இடமளிக்க மறுக்கிறது. அவளை அண்டிக் கேட்கவோ அச்சம் முன்னிற்கிறது. அதை மீறவோ தோளாமை நடுங்கிறது. என்ன நேருமோ! யாதாகுமோ! யானறியேன். என்னவாகமுடியும் இறுதியில் பைத்தியம் வந்து சேரும். அதையுந்தான் தடுப்பார்யார்? வருவன வருக.

(எழுந்து அயர்வுமேற்கொண்டவனாய் தலை தாழ்ந்தவாறே செல்கிறான்)

* * *

மணி, தன் அறையில் உலவிக் கொண்டிருக்கிறான். மதி விரைந்து வந்து-

மதி: மணி! நீ செய்யவேண்டிய பணிக்குரிய துணை கிடைத்துவிட்டது.

மணி: யார் மதி! நீ தேர்ந்தெடுத்திருந்தால் தகுதி வாய்ந்திருப் பதில் சந்தேகமில்லை. யாரந்தப் புதிய நண்பன்! வெளியூர் வாசியா? இவ்வூராளாக இருந்தால் எனக்குத் தெரியாதவர்களாயிருக்க முடியாதே! யார் மதி! பேரென்ன? எந்தத் தெரு! யாருடைய மகனோ!

மதி: அவைகள் எனக்கு மட்டுமல்ல! யாருக்கும் தெரியாது. அதுதான் உன் உறு துணைக்கு உரிய அமைப்பு.

மணி: நீ சொல்வதொன்றும் விளங்க வில்லையே!

மதி: விளங்கிக் கொள்ள எந்த விதநாயமு மில்லை.

மணி: என் குழப்பத்தை மேலும் மேலும் வளர்க்கிறாய்!

மதி: விளக்குகிறேன். வாழ்வில் உயிருடனிருப்போரைவிட உயிரற்றோரால் விளையுஞ்செயல் மிகப் பெரிது. ஒரு பிணம் செய்யும் ஆக்கம் எந்தத் திறம் படைத்தவனாலும் செயற் படுத்திக் காட்ட முடியாததாயிருக்கின்றது. பிணம்; இனத்துக்கு விடுதலை வாங்கித்தந்திருக்கிறது, நாட்டுக்கு உரிமைவாங்கித் தந்திருக்கிறது, சுருங்கக் கூறினால் பல ஏழைகளின்பிணத்தில் உருவானது சில பணக்காரர்களின் வாழ்க்கை. இவையாவற்றையுங்கடந்து நின்று எண்ணிப்பார்த்தால் மாந்தர் தான் வாழ, தன்னை அலங்கரித்துக்கொள்ள தன் உயர்வை வெளிப் படுத்திக் காட்டத் தன்னைச் சுற்றிலும் பிணத்தையே தான்குவித்துக்கொள்கிறார்கள். உணவுக்கு உதவும் கீரைத் தண்டு முதல் ஒய்யாரத்துக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் அணிபணிகள் வரை பிணமல்லாது வேறென்ன? அதேபோல் தற்போது ஒரு பிணவான் கிடைத்திருக்கிறார் உன் செயற்திட்டத்தின் தூதுவராக.

மணி: பிணவானா!

மதி: ஆம்! யாரோ ஒருமதிமன்னன்! வாழ்க்கையின் எந்தவித அடையாளமும் அவன்வரை யில்லையாயினும், என்போன்றோருக்கு உதவும் சில இயற்கையடையாளங்கள் மட்டும் அவன் உடம்பிலிருக்கிறது.

மணி: அதற்கும் நமக்கும் என்ன தொந்தம்.

மதி: நிறைய இருக்கிறது. குளத்தில் விழுந்து இறந்துவிட்டான். அனாதை! ஆமாம்! அதுதான் அவன் பெயர்.

மணி: மிக உயர்ந்த பெயராயிற்றே! ஆண்டவனின் பெயரிலேயே அது ஒன்றல்லவா?

மதி: அந்தப் பெயருக்கும் இந்த அன்னக்காவடிக்கும் எந்த ஒற்றுமையும் கிடையாது. அந்த அநாதையிடம் பொன்னால் திருவோடு-வைரத்தால் யோகதண்டு - வெள்ளிக்கமண்டலம், நவரத்தனத்தாவடம் - பஞ்சலோக பாதக்குறடு - இவையல்லவா பரிமளிக்கும். இவன் பஞ்சத் திருமேனி, பட்டினிக்கிடங்கான வயிறு, தோலோடு போராடும் எலும்புக்கூடு இவற்றின் வார்ப்படம்.

அவனைக்கொண்டு ஒரு உண்மையை நிலைநாட்ட நினைத்து ஓடோடிவந்தேன்.

மணி: என்ன உண்மையது? யாராவது அவனைக் கொலைசெய்து அது வெளிப்படாமலிருக்கக் குளத்தில் தூக்கி எறிந்துவிட்ட செய்தி உனக்குத் தெரியுமா? அல்லது அவன் சாவு பற்றிய வேறுசெய்திகளைக் கொண்டு வெளிவராத சில ரகசியங்களை வெளியிடப் போகிறாயா?

மதி: மேற்கூறி எதைப்பற்றியும் எனக்குக் கவலை இல்லை! நீ சைவவேளாள இனம்!

மணி: மதி! அப்படியெல்லாம் நானென்றும் ஜாதிமத பேதத்துக்கு அடிமைப்படமாட்டேன்.

மதி: அவசரப்படுகிறாயே! அடிமைப்படு! உன்னை அடிமைப்படு என்று உபதேசம் செய்யவா நான்வருவேன். நான் முதன் மொழியில் கூறியவற்றை மறந்து பேசுகிறாய்!

மணி: சரிசரி! இப்போது நான் என்ன செய்யவேண்டும்!

முழுவைதீகனாக, சமயப் பற்று சற்றும் விலகாதவனாக, மதவெறியனாகத் திகழவேண்டும். நான் பிறமதத்தவர்களையும் ஏற்பாடு செய்கிறேன். இறந்தவன் இன்ன மதத்தவன் என்று முடிவு செய்யப்பட்டு அதன் பிறகே அடக்கம் செய்யப்பட வேண்டுமென்ற பிரச்சினையில் நீ இறங்க வேண்டும். அதன் மூலம் "மதமெல்லாம் வாழும்வரை, வாழ்வோர்க்காக, வாழ விரும்பினோர் வகுத்தது" அந்த செயலுக்கு ஒரு இடுகுறிப்பெயர்ச் சொல் மதம் என்பதை எடுத்துக் காட்டவேண்டும். அதன் பிறகு ஏனைய உன் திட்டங்கள்! புறப்படு முதலில்.

(என்று அனுப்புகிறாள்)

* * *

இதுவரை ஒத்திகையில் கண்டு கேட்டு, இதுபோன்ற நாடகம் நாட்டவருக்கு நல்ல பயன் தரும் என்று மகிழ்ந்திருந்தேன்.

ஆனால் முளையிலேயே வீழ்த்தப்பட்டுவிட்டது முயற்சி. அடுத்தஒத்திகைக்குச் சென்ற போது ஒத்திகை இல்லை! என்றனர். நாடகம் நடக்கவிடாமல் செய்து விட்டனர் என்றுணர்ந்தேன், உண்மையில் இவை நடைபெறாத நாடகம்தான்.

(முடிவுற்றது)

(மலாயா) தமிழ்ப்பெருமக்களுக்கோர் நற்செய்தி!

அவ்வை புத்தக நிலையம்

142, ஜா்லான் இட்ரீஸ், கம்பார் - மலாயா.

அன்புடையீர், வணக்கம்,

நீங்கள் அறிவுச் சிற்பிகளாக விளங்க உதவும் அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கவிஞர்களின் காவிய ஏடுகளும், கலைஞர்களின் நூல்களும், மற்றும் தமிழ், மலாய், ஆங்கில, தினசரி - வார - மாதப் பத்திரிக்கைகளும், இங்கிலீஷ் காமிக்ஸ் & மேக்கசின்களும், பள்ளிக்கூட புத்தகங்களும் (சினிமா) கதை வசன - பாட்டு, புத்தகங்களும், புகைப் படங்களும் 1957-ம் ஆண்டு காலண்டர்களும் - டயிரிகளும்; கிருஸ்மஸ், தமிழர் திருநாள், பொங்கல், வாழ்த்திதழ்களும், மற்றும் ஸ்டேசணரி சாமான்களும், மலிவான விலையில் எங்களிடம் கிடைக்கும்.

குறிப்பு :—தையல் வேலைகளும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

விவரங்கட்கு :

AVVAI BOOK STALL

142, JALAN IDRIS, KAMPAR. MALAYA.

உரிமையாளர் :—கோ. வரதராசன். த. பெட்டி எண். 22, டெலிபோன் : எண் 22

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037 - 38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது

அருமைமிக்க அண்ணல்

“ இராஜினாமா கொடுத்துவிட்டேன்! ‘விடுதலைக்’குத் தலைமுழுக்கப் போட்டுவிட்டேன்!” ன்னும் கருத்துப்படக் கூறினார்.

“ ஏன் இவ்வளவு அவசரப்பட்டீர்கள்? சிறிது பொறுத்திருந்து பார்க்கலாமே!” ன்றேன்.

“ எப்படிப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும?” என்று அவர் கேட்டார்.

“ கட்சியின் எதிர்காலம் எப்படி உருவாகிறது என்பதைப் பார்த்துக்கொண்டு எந்த ரு முடிவுக்கும் பிறகு வரலாமே!” என்றேன்.

“ உங்களுக்குத் தெரியாது நெடுஞ்செழியன்! கட்சியின் கொள்கையையும், ஜனநாய த்தையும், மானத்தையும் காற்றில் பறக்கவிட்ட ஒருவரது இடத்தில் இருந்து பணிபுரிவது வ்வளவு வேதனை தரக்கூடியதாக இருக்கிறது தெரியுமா? இப்பொழுதுதான் என் மனம் ம்மதிபெற்றிருக்கிறது!” என்னும் கருத்துப்பட அவர் கூறினார்.

“ இனி என்ன செய்யப் போகிறீர்கள்?” என்று கேட்டேன்.

“ அண்ணாவும் நீங்களும் என்ன செய்யச்சொல்லுகிறீர்களோ, அதைச்செய்யக் காத்திருக் றேன்” என்றார்.

இந்தச் செய்தியை அறிந்த அறிஞர் அண்ணா அவர்கள் “‘ திராவிடநாடு’ அலுவல த்தில் இருந்து அவர் வேலை பார்க்கட்டும். அது எனக்குப் பேருதவியாக அமையும்” ன்று கூறினார்.

அறிஞர் அண்ணா அவர்களின் விழைவு அவரிடம் தெரிவிக்கப்பட்டது அவரும் பேருவ கையோடு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள இசைந்தார். அவர்தான் நமது அன்பிற் ரிய நண்பர் அரங்கண்ணல் ஆவார்கள்.

பெரியார் இராமசாமி அவர்கள் கட்சித்தோழர்கள் பெரும்பாலோரின் விருப்பத்திற்கு றுபடாகவும் சனநாயகப் பண்பிற்கு முரண்பாடாகவும், கட்சியைத் தம் சொந்த வாரிசுக்கு ரிமையாக்கும் வகையிலும் “ திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாட்டினை”ச் செய்து காண்டபோது, ‘ விடுதலை’ அலுவலகத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்த தோழர் அரங் ண்ணல் அவர்கள் மிக்க வேதனையுற்று, உடனே தம் பொறுப்பிலிருந்து விலகல் பெற்றுத், ய உள்ளத்தோடு கட்சிக்குப் பணியாற்ற துடிதுடித்து ஓடோடியும் வந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள அருமையான இளஞ்செம்மல்களில் தாழர் அரங்கண்ணலும் ஒருவராவார். அவர் திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் காண்டிருந்தபோது, ஆரம்பகாலத்தில், ஒரு காங்கிரசு மாணவராகவே காட்சியளித்து வந் ார். அவர் பள்ளியின் இறுதி வகுப்புகளை நாடும்போது, கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நருங்கிய தொடர்பின் காரணமாகத் திராவிட இயக்கப்பற்றினைக் கொண்டார். அவர் அண்ணா லைப் பல்கலைக்கழகத்தில் இடைநிலை வகுப்பில் பயின்றுகொண்டிருந்தபோது, உணர்ச்சி யாடும், எழுச்சியோடும் மாணவர் இயக்கப்பணியை ஆற்றிவந்தார். அப்பொழுது ஒருமுறை ான் அண்ணாமலை நகருக்குச் சென்றேன். அவரைக் காணும் வாய்ப்பை அதுபோதுதான் தன்முதலாகப் பெற்றேன்.

தோழர் அரங்கண்ணல் அவர்கள் கழகக் கொள்கைகளிடத்து நீங்காப் பற்று காண்டு கழகத்தின் பணிகளை மிக அக்கரையோடும், ஆர்வத்தோடும், பொறுப்போடும், பாறுமையோடும் செய்துமுடிக்கும் திறம்படைத்தவர். அவரது எழுத்தின் வண்ணத்தைக் ழகத்தோழர்களும், ஆதரவாளர்களும், பிறரும் நன்கு அறிவர். அறிஞர் அண்ணாவின் ழுத்து நடையின் சாயல், தோழர் அரங்கண்ணல் அவர்களின் எழுத்துநடையிலே படிந்திருப் தைக்கண்டு வியப்படையாதவர்கள் யாருமில்லை. அண்ணாவின் நடைக்கும், தோழர் அரங் ண்ணல் அவர்களின் நடைக்கும் வேறுபாடுதெரியாமல் மயங்குவோரும் உண்டு. அந்த அள க்கு அவரது நடையழகு உயர்ந்து விளங்கும். ‘குடி அரசு’, ‘முஸ்லிம்’ ‘விடுதலை’ ஆகிய தழ்களில் பணியாற்றி அவைகளைச் சிறப்புச் செய்து, தாமும் சிறப்புப்பெற்றார். இப் பாழுது “ திராவிடநாடு” இதழ்மூலம் தம் அரும்பணியை ஆற்றிவருகிறார்.

இப்பொழுது தோழர் அரங்கண்ணல் அவர்களின் கவர்ச்சிகரமான எழுத்து நடையை ரும்பி ஏற்கத் திரைப்பட உலகம் முன்வந்திருப்பது மகிழ்வதற்குரியதாகும். அவரின் “செந் ாமரை” என்ற திரைப்படம் உருவாகி முற்றுப்பெறும் தருவாயில் இருக்கிறது. அறிஞர் ண்ணா அவர்களின் கதையாகிய “ தாய் மகளுக்குக் கட்டிய தாலி” தோழர் அரங்கண்ணல் வர்களின் வசனத்தைப்பெற காத்துக்கொண்டிருக்கிறது.

அருமைமிக்க நண்பர் அரங்கண்ணல் அவர்களின் பேச்சும், எழுத்தும், பணியும் கழகத் ற்கு மேலும் மேலும் உரமூட்டுவனவாக என்றும் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐய ல்லை!

—இரா. நெ.

அறிஞர் அண்ணாவின்
ரங்கோன் ராதா
தயாரிப்பு: மேகலா பிக்சர்ஸ்
சென்னை:
பிரபாத் • பாரகன் • சரஸ்வதி
மற்றும் தென்னாடெங்கும்
G.H.RAO
வசனம்:
மு. கருணாநிதி
டைரக்ஷன்:
A. காசிலிங்கம்